மேற்கு வங்கச் சிறப்பிதழ் — II

கல்கி

KALKI 14.5.88 ரூ. 2.

"தமிழகத் தேர்தலில்
இ.காங்கிரஸை
வீழ்த்துங்கள்!"
–ஜோதிபாசு பேட்டி

பிறந்த நாள் இன்று... அரும்பெரும் பரிசு ஒன்றை மீரவுக்கு அளித்துவிட்டது ஃபேர் அண்ட் லவ்லி.

இந்த நாளுக்காகவே மீரா அரு முயற்சி எடுத்திருக்கிறாள். இரு மாத முன்னேற்பாடுகள் — அதில் முக்கியமானது ஃபேர் அண்ட் லவ்லி முகழகுத்த பயிற்சி, முகம் மேனியே வெண்மையைப் பெறுத்துவது இதமாக, இயல்பாக. பிரகாசமாக. பேட்டருனை அவளிடம் தீட்டும் ரவி, பார்ப்பதை முத்தமாக பருகுகிறான் சக்தராகப் பறவை போல். அதை வாங்கும் மீரவின் இதயம் படபடிறது தன்றி கீறும் — ஃபேர் அண்ட் லவ்லி கீரழகு!

மீனைப் போலவே நீங்களும், கனவிக்கத் தக்க சிகப்பழகை அடைந்திட முடியும் ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...

ஃபேர் அண்ட் லவ்லி. இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா — இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது. ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செல்கிறது, உடல்



ஃபேர் அண்ட் லவ்லி துலங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகித்தும் நாட்களில்



கறுக்கும் உயிரணுவைத் தூண்டுகிறது — மேலெழுந்த கீரழகும் இது இயல்பாக எதனால். மற்றொன்று: இதிலுள்ள இயல்பான ஆற்றல், உடலழகுக்கு மையக்கும் குரிய ஒளியை உட்புகுந்து தடுத்து நிறம் வாத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழுந்தும் கொழுத்துச் சருமப் படலங்களில் வெளிவரான சமயம் மீரிரும். அதைடன் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி — நான் தவராமல் உபயோகித்து வந்தால், வெள்ளை கொஞ்சம் இயல்பான சிகப்பழகு உறுதியாக உதாரி விடும்.

உபயோக முறை :

காழலில் வெள்ளை முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி கிரீமை கொட்டும் கொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் வெதமாக. ஃபேர் அண்ட் லவ்லி, செலவைத் தூண்டும் போது எற்ற கூடிய உணர்வு ஏற்படுவதால் கவலை வேண்டாம். விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குளுமை முன்னேற்பும் வெண்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி. ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது.

உடனடி உணருவீர் இம் மாறுதலை...! காணக் கண்களை.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினால் எழுதுங்கள் இம் முகவரிக்கு :
திருமதி லலிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி அட்வைசர், பி.ஓ. பாக்ஸ் 758, பம்பாய்-400 021.

கண்கானும் சிகப்பழகை உமதாக்கும்... இயற்கைக்கே உரிய இதமான வழியி

இந்துஸ்தான் லீவர் நாளான தய

"நாடகங்களும் சினிமாக்களும் வங்க மக்களை மாற்ற முடியாது..."

கல்கத்தா விஸ்வநாதன்

அவ்வப்போது தமிழ் சினிமாக்களில் வந்து தலைகாட்டிச் செல்லும் கல்கத்தா விஸ்வநாதன் ஒரு தமிழர். தமது வங்க மனைவி யோடு கல்கத்தாவிலேயே செட்டில் ஆனவர். கல்கத்தாவிலுள்ள புனித சேவியர் கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் இவர், வங்க நாடக உலகில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றவர். வங்க மொழிச் சினிமாக்களிலும் நடிப்பவர். இன்று வங்க நாடகங்கள் — சினிமாக்கள் பற்றியும் வங்க மக்கள் ரசனை பற்றியும் விளக்குகிறார்.....

இன்று வியாழக் கிழமை என்று எஸ். வி. சேகர் வசனம் பேசினாலே தமிழக நாடக ரசிகர்கள் அத்தனை பேரும் விழுந்து விழுந்து சிரித்து விடுவார்கள் என்று சொல்லுவார்கள். அதெல்லாம் வங்க மக்களிடம் சுத்தமாக எடுபடாது. வங்கத்தில் நாடகங்களும் சரி, சினிமாக்களும் சரி நல்ல கதையம்சம் கொண்டதாக — அறிவுபூர்வ மானதாக — மக்களின் சிந்தனைகளை உயர்த்துவதாக, இருக்க வேண்டும். அப் போதுதான் எடுபடும்.

'நபத்' என்று ஒரு நாடகம். நபத் என்பது வானாய் வாசிப்பில் ஒரு ராகம். இது திருமணத்தின் போது வாசிக்கப்படு வது. இந்த ராகம் இரண்டு பேர் ஜோடி சேருகிறார்கள் என்கிற சந்தோஷத்தை வெளிப்படுத்துவதாகவும், இந்த ஜோடி இனி வாழ்க்கையிலுள்ள அன்றாடப் பிரச் னைகளை எப்படிச் சமாளிக்கப் போகி றதோ என்ற வருத்தத்தை வெளிப்படுத்தல தாகவும் இருக்கும். இந்த ராகத்தின் பெய ரைத் தலைப்பாகக் கொண்ட நாடகம் இங்கே ஏழு ஆண்டுகள் நடிக்கப்பட்டது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? அந்த அளவுக்கு நல்ல கதையம்சம் கொண்ட நாட கங்களை மக்கள் பெரிதும் விரும்புகிறார் கள்.

அதே மாதிரி மேடையில் ஒரு நடிகனோ நடிகையோ சரியாக வசனம் பேசி நடிக்கா மல் இரைச்சலாக உடனே இங்குள்ள ரசிகர் கள் எங்கிருந்தாவது தலைகளைப் பிடித்து வந்து மேடை மீது விட்டெறியார் கள். (தமிழ்நாடு மாதிரி கல்லெடுத்து அடிக் கிற சமாசாரம் இல்லை) கூடவே யாராவது ஒரு ரசிகர் ஓடி வந்து நடிக்கத் தெரியாத அந்த நடிகனிடமோ அல்லது நடிகையிடமோ நாலணாக் காசைக் கொடுத்து, 'சரியாக வசனம் பேசி நடிக்கக் கற்றுக் கொண்டு பிறகு நடிக்கவா' என்று சொல்லி அவமானப்படுத்தி விடுவார். அந்த அளவுக்கு மக்கள் இங்கே விழிப் புணர்வு பெற்றிருக்கிறார்கள்.

வங்க நாடக இயக்கத்தை மூன்று பிரிவு களாகப் பிரிக்கலாம். முதல் வகை 'ஜாத்ரா'

* இது பெரிய விஷயமல்ல; தாத்தா நாடக விஷயம்!

என்று சொல்லப்படும் நாமிய கலை நாடகங்கள். இரண்டாவது குரூப் தியேட்டரில் எனப்படும் சோதனை நாடகங்கள். மூன்றாவது புரொபஷனல் தியேட்டரில் எனப்படும் நாடகத்தையே ஒரு தொழிலாகக் கொண்டவர்களால் நடத்தப்படும் நாடகங்கள்.

இவற்றில் தாத்தா என்னும் முதல் வகைக்குத்தான் இன்று ஏக மவுசு. அதில் நடிக்கும் நாடக நடிகர் ஒருவர் மக்களிடையே செல்வாக்கும் பெற்று விட்டால் ஆறே மாதங்களில் பதினாறு லட்சம் ரூபாய் அளவுக்குச் சம்பாதித்து விடலாம்! தாத்தா என்றால் நாமம் நாமமாகச் சென்று நாடகம் போடும் குழு என்று அர்த்தம். இந்த நாடகத்தில் செட்டிங் என்கிற விஷயமெல்லாம் கிடையாது. ஒரு சிறு மேடை. அதற்குப் பின்னால் ஒரு திரை. அவ்வளவுதான். ஆனால் கதையம்சமும் வசனங்களும் மிகவும் முக்கியம். இப்படிப்பட்ட நாடகங்களைப் பார்ப்பதற்குப் பத்தாயிரத்திலிருந்து பன்னிரண்டாயிரம் மக்கள் வரை வந்து குவியலாம். சுருக்கமாகச் சொன்னால் தாத்தா நாடக நடிகர்களும் நடிகைகளும் தான் இன்றே சினிமாக்காரர்களைவிடப் பல்லை மடங்கு செல்வாக்கு மிக்கவர்களாக விளங்குகிறார்கள்.

இருப்பினும் ஒரு நடிகனோ நடிகையோ மக்களிடம் எத்தனை பாப்புலாரிட்டி பெற்றிருந்தாலும் ரசிகர் மன்றம் அமைக்கிற பிரளயமெல்லாம் இங்கே கிடையாது. நடிகர்களை இந்த மக்கள் மேடைகளில் மட்டுமே பார்க்க விரும்புவார்கள்; பாராட்டுவார்கள். ஒருபோதும் அவர்களிடம் மயங்கிப் போய்விட மாட்டார்கள். அதே போல் ஒரு நடிகனோ, நடிகையோ இங்கு அரசியலுக்கு வந்தால் மக்கள் ஏற்றுக் கொள்வதும் மாட்டார்கள். அந்த அளவுக்கு நடிப்பையும் நிஜத்தையும் மக்கள் வித்தியாசப்படுத்திப் பார்க்கும் நிலை கொண்டவர்கள்.

பாதல் சர்க்கார் போன்றவர்களால் நடத்தப்படும் சோதனை நாடகங்களும் நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. தொழில் ரீதியாக நடத்தப்படும் வர்த்தகம் நாடகங்களும் கதையம்சங்களைப் பொறுத்து வரவேற்பைப் பெறுகின்றன.

வங்க மொழித் சினிமாக்களைப் பொறுத்தவரை ஆண்டுக்கு இருபத்தைந்து படங்கள் வெளியானாலே அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். இந்தத் தேக்கத்திற்குக் காரணம் வங்க மொழிப் படங்கள் வெளி மாநிலங்களில் எடுபடுவதில்லை என்பதுதான்! ஏனெனில், வங்க மக்கள் செக்ஸ், வயலன்ஸ் போன்றவற்றைத் துளியும் விரும்புவதில்லை என்பதால் இவற்றைத் தவிர்த்து வங்கப் படங்கள் எடுக்கப்படுகின்றன. இந்த இரண்டும் இல்லாவிட்டால் வெளி மாநிலங்களில் எப்படி வங்கப் படங்கள் எடுபடும்? எனவேதான் வங்கப்படங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் சத்யஜித்ரே, மிருணாள் சென் போன்றவர்கள் வங்கப் படவுலகத்தை அகில உலக அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்பது பெருமைக்குரிய விஷயம்.

வங்க மக்களிடையே செக்ஸ்-வயலன்ஸ் சகஜமாக எடுபடாது என்றால் அவற்றையே பிரதானமாகக் கொண்டு தமிழ்ப் படங்கள் வங்கத்தில் ஓடியது எப்படி என்று கேட்கலாம்! உண்மைதான். மற்ற மாநிலங்களில் ஓடும் அளவுக்கு இல்லாவிட்டாலும் இங்கும் ஓரளவுக்கு தமிழ்ப் படங்கள் ஓடவே செய்கின்றன. இருப்பினும் தமிழ்ப் படங்களையெல்லாம் வங்க மக்கள் அலட்சியமாகப் படங்கள் – வியாபிப் படங்கள் என்றுதான் இன்னும் பிரித்து வைத்திருக்கிறார்கள். அந்த வியாபி தங்களைப் பிடித்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

சுருக்கமாக வங்க நாடக இயக்கத்தோடு தமிழக நாடகங்களை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், தமிழகத்தில் நாடக இயக்கம் இன்று கடுமையான நெருக்கடியிலிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சினிமாவைப் பொறுத்தவரை தமிழகத்தில் எப்போதாவதுதான் நல்ல சினிமாக்கள் வெளி வருகின்றன. வங்கத்திலோ எப்போதாவது தான் மோசமான சினிமாக்கள் வெளிவருகின்றன!

தொகுப்பு: தமது நிருபர்கள்.

கல்கத்தா மெயில்வே!

பயணம் பற்றி இருக்கும் கொஞ்சம்!

"ஓய்யா... கட்டம் போட்ட சட்டை, முன்னால மட்டும் ஏறத்தெரியுது... டிக்கெட் வாங்கிக்கத் தெரியாதா? வந்து வாங்கிட்டுப் போய்யா..."

— இது சென்னை நகரப் பல்லவன் பஸ்களில் ஏறுபவர்கள் பலமுறை கேட்டிருக்கும் பல்லவி. இங்கே டிக்கெட் வாங்கும் பொறுப்பு பயணிகளுடையது.

கல்கத்தா நிலைமையோ தலைகீழ்! பஸ்ஸில் ஏறிய பயணிகள் தானாகப் போய் கட்டணத்தை கொண்டாக்கள் அல்லது வசியான இடத்தில் போய் நின்று கொண்டாக்கள். பிறகு கண்டக்டர்தான் பயந்து பயந்து பயணியிடம் வந்து, "தாதா தாதா டிக்கட்டுன்..." (அண்ணே அண்ணே டிக்கெட் வாங்குங்கள்) என்று மரியாதையாகச் சொல்லுவார்.

அதற்குப் பயணியோ, "தேரி!" (வாங்கி

* படகுச் சவாரி

குறேன்) என்று சொல்லிவிட்டுப் பேசாமல் வேடிக்கை இருப்பார். கண்டக்டர் போய் விடுவார்.

மறுபடியும் சிறிதுநேரம் கழித்துக் கண்டக்டர் வந்து, "தாதா தாதா..." என்று தூண்டுவார். அதற்குப் பயணி, "தேரி தடாங்கா!" (வாங்கறேன்னு சொல்றேனில்லே...) என்று எரிந்து விழுந்துவிட்டுப் பேசாமல் இருப்பார்.

மீண்டும் சிறிது நேரம் சென்று கண்டக்டர் வந்து மெதுவாக, "தாதா... தாதா..." என்று கேட்பார். அப்போதும் பயணி, "அமி துனேக்தா துஷி போதேனியடு..." (நான் தான் கொம்ப தூரம் போறேனே... பிறகு வாங்கறேன்) என்று சர்வசாதாரணமாகக் கூறுவார். ஒருவழியாகத் தான் இறங்கும் இடத்தில்தான் டிக்கெட் வாங்குவார் பயணி.

இத்தனைக்கும் கல்கத்தாவில் ஓடும் அர

சாம்சுங் டயல் பல்களில் குறைந்தபட்சக் கட்டணம் இரண்டு பைசா; அதிகபட்சக் கட்டணம் அறுபத்தைந்து பைசா என்று இரண்டே இரண்டு வகைக் கட்டணங்கள் தான்.

'மினி பல்' என்று சொல்லப்படும் தனியார் பல்களில் குறைந்தபட்சக் கட்டணமே என்பது பைசா. இந்தப் பல்கள் நம்மவர் 'வி' சர்வீஸ்கள் மாதிரிப் பல இடங்களில் திறக்காமல் தொகாச் செல்லும். அரசாங்க பல்களும் சரி, மினி பல்களும் சரி, நம்மவர் பல்களின் அழகுக்கும் வசதிக்கும் நிறு கூட ஈடாகாது. ஒரே ஆறுதல் கட்டணம் பல மடங்கு குறைவு என்பது தான்!

இன்று இந்தியாவில் முழுமும் ஒரே நகரம் கல்கத்தா மட்டுமே. முழும் கட்டணம் பது குறைவு. முதல் வகுப்பில் (இதில் ரயில் மாதிரி காற்றாடி வசதி இருக்கும். இரண்டாம் வகுப்பில் இருக்காது. இதுதான் வேறு பாடு) நாற்பத்தைந்து பைசாவும், இரண்டாம் வகுப்பில் நாற்பது பைசாவும் வசூலிக்கப் படுகிறது. ஒரே கட்டணம்தான். எந்த வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ளலாம். ஒருவேளை நீங்கள் இந்த ஸ்டாப்பில் ஏறி அடுத்த ஸ்டாப்புக்கு முன்னாடியே இறங்கிக் கொள்வீர்கள் (முழும் மெதுவாகத் தான் போகும் என்பதால் எந்த வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ளலாம்) என்றால் டிக்கெட்டே வாங்கத் தேவையில்லை. 'இதோ... அங்கே இறங்கிக் கொள்கிறேன்...' என்று கண்டக்டரிடம் சொன்னால் அவரும் பேசாமல் இருந்துவிடுவார்.

கல்கத்தாவையும் தொழாவையும் பிரித்து வைப்பது ஹூக்ளி நதிதான். அதைக் கடக்கும் ஒரே வழி உலகிலேயே பிரமாண்டமான தொங்கும் பாலந்தான். அதனால் பாலத்தில் ஏகப்பட்ட நெரிசல். அதைத் தவிர்ப்பதற்காகவே நதிக்கரையின் இருபுறங்களிலும் பல இடங்களில் இயற்கைப் படுகைகளை இயக்குகிறார்கள். நதியைக் கடக்கக் கட்டணம் இம்பதே பைசாதான்.

கல்கத்தா டாக்ஸிக்காரர்களைப் பொறுத்தவரை ரயில்வே ஸ்டேஷன்களில் இருக்கும் டாக்ஸி டிரைவர்கள் நம்மவர் மாதிரியே மொழி தெரியாமல் கல்கத்தா வரும் அந்நியர்களைச் சுலபமாக ஏமாற்றுகிறார்கள். மற்ற இடங்களில் உள்ளவர்கள் அப்படியில்லை; ஆட்டோ மாதிரி மூன்று நான்கு ரூபாய்களே கட்டணமாகக் கூடிய குறைந்தபட்சத் தூரத்திற்குக் கூட முகம் கனிக்காமல் வருகிறார்கள்.

மெட்ரோ என்று சொல்லப்படும் பாதாள ரயிலும் இந்தியாவில் கல்கத்தாவில் மட்டுமே ஓடுகிறது. பதினாறு கி.மீ. தூரத்திற்கு ஓடும் இதன் அதிகபட்சக் கட்டணம் ஒன்றரை ரூபாய். குறைந்தபட்சம் ஒரு ரூபாய். ரயில் பூமிக்கடியில் ஓடுகிறது என்பதால் உள்ளே முழுவதுமாகக் குளிர் சாதன வசதி செய்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேர் ஒவ்வொரு நிமிஷமும் புழுங்கிக் கொண்டிருக்கும் பாதாள ரயில்களிலும் சரி, பிளாட்பாரங்களிலும் சரி, மருந்துக்குக் கூட ஒரு சிறு தூசியைக் காண முடியாதது பாராட்டுதலுக்குரிய விஷயம்.

பிள்ளைகாட்டும் முழும், ரயில்களாகட்டும் பெண்களுக்கென்று தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவென்றாலும்பெரும்பாலும் ஆண், பெண் பேதமின்றியே எல்லா இடங்களிலும் கலந்து உட்கார்ந்து பயணம் செய்கிறார்கள். அருகருகே உட்கார்ந்து பயணம் செய்வதாலேயே இருபாலரும் உயர்ந்த நாகரிகத்தோடு நடந்து கொள்கிறார்கள்.

இத்தனை விஷயங்களையும் பாராட்டுகிற நம்மால் ஒரேயொரு விஷயத்தைத்தான் சகித்துகொள்ள முடியவில்லை. அதுதான் இன்னமும் அங்கே இருக்கும் கைரிக்ஷாக்கள். மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமையை எப்படியொரு கம்யூனிச அரசால் சகித்துக் கொள்ள முடிகிறது என்பதுதான் வியப்பாக இருக்கிறது.

— கலைச்செல்வன்.

அடுத்த இதழுடன் 16 பக்க இலவச இணைப்பு அமரர் கல்கியின் தந்தாவல் — ஜமீன்தார் மகன்

இலவசம்!

பாப்பாவுக்கு ஒரு அழகிய பீங்கான் கிண்ணம்
-பரிசுடன் அளிப்பது ஃபாரெக்ஸ்.

ஒரு அழகான பயனுள்ள பீங்கான் கிண்ணம் — இதிலே, பாப்பா மிகவும் விரும்பிச் சாப்பிடும்!

பாப்பாவின் சுவையிக்க சத்துணவு ஃபாரேக்ஸ் ஒவ்வொரு டின் வாங்கும்பொழுதும் இலவசம் இந்த அழகிய பீங்கான் கிண்ணம்.

இப்போது கிடைக்கிறது தேர்ந்தெடுத்த கடைகளில்!

03/37/213 TML

"தமிழகத் தேர்தலில் இ.காங்கிரஸை வீழ்த்துங்கள்..!"

கேள்வி: மேற்கு வங்கத்தில் டார்ஜிலிங் தவிர வேறு எந்தப் பகுதியும் கற்றுலாப் பயணிகளைக் கவருவதாகத் தெரியவில்லை. வேறு இடங்கள் ஏதேனும் இருக்கின்றனவா? அப்படியிருந்தால் அவற்றை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறீர்கள்?

மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு: நீங்கள் சொல்வது உண்மைதான். டார்ஜிலிங்கூட இன்னும் சரியான முறையில் வெளி நாட்டவர்களிடம் பிரபலப்படுத்தப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். வந்து கொண்டிருந்த கொஞ்சம் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அந்த எப்பட்ட கூர்க்காலாந்துப் போராட்டத்தால் வராமல் போய் விட்டனர். இனி அப் பிரச்னை தீர்ந்து சுமுகமடையும் என்று நம்புகிறேன். டார்ஜிலிங் தவிர வெளிநாட்டவர்களையும் மற்ற மாநிலத்தவரையும் கவரும் இடம் 'சுந்தர்பான்ஸ்' எனப்படும் சதுப்பு நிலக் காடுகள். அதை இப்போது அபிவிருத்தி செய்து வருகிறோம். மற்றபடி கடலோரப் பகுதியான திகார் என்ற இடமும் சிறிது குன்றுகளைக் கொண்ட பகுரா என்ற இடமும் இதுவரை மேற்கு வங்க மக்களின் பிக்னிக் ஸ்பாட்டுகளாகத்தான் இருந்து வருகின்றன. இப்போது இவற்றையும் மற்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்து வருகிறோம். மேலும் ஹல்தியா நதியில் மிதக்

தும் தொகுதி அமைக்கும் திட்டமும் 'கத்தரிக்காய்' காலத்துக்கு முன்னும் பின்னும் மாய் பலவிதமான கற்பனைகளில் மூழ்கி விடுகளில் அழுத்தும் செல்லும் திட்டமும் இருக்கிறது. இவற்றையெல்லாம் சாத்தியப்படுத்த பொருளாதார உதவியுடன் செய்து வருகிறோம்.

கல்கி: மேற்கு வங்கத்தில் மின் வெட்டு இருக்கிறதா? அதற்கு என்ன காரணம்?

ஜோதிபாசு: இப்போதும் மின் வெட்டு இருக்கத்தான் செய்கிறது. கடந்த எட்டாண்டுகளில் மின் உற்பத்தியை அதிகரித்து தானாடு மெகாவாட் அளவுக்கு அதிகரித்திருந்தாலும், தேவையும் கூடவே அதிகரித்துக் கொண்டு வருவதால் பற்றாக்குறையும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. இருப்பினும் நிலைமை முன்புபோல் இல்லை; இப்போது அதிகரித்துவருகிறது. வெறும் பதினைந்து மெகாவாட் மின்வெட்டே இப்போது இருக்கிறது. எனினும் விட்டு விடாமல் முயன்றால் இன்னும் பிரச்சனைகள் தீர்ந்து போய்விடும். இயற்கையெல்லாம் கருத்தில் கொண்டுதான் மேற்கு வங்க அரசின் திட்டக் கமிஷன் பரிந்துரை செய்த 240 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பக்ரேஷ்வர் அனல் மின் திட்டத்தைச் செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டோம். அதற்கு மத்திய அரசு சரியான ஒத்துழைப்புத் தரவில்லை. இதற்கிடையில் எங்களுக்குச் சோவியத் அரசு உதவ முன் வந்தது. சோவியத் உதவியை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். இந்நிலையில்தான் மத்திய அரசு, சோவியத் அரசிடம் மே. வங்க அரசோடு கூட்டுச் சேராமல் நேரில் அனல்மின் கழகத்தோடு சேர்ந்து பக்ரேஷ்வர் மின் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியது. அப்படிச் செய்தால் அதன் உற்பத்தியில் முப்பதைந்து சதம் மின்சாரமே எங்களுக்குக் கிடைக்கும். அதனை முழு அளவும் எங்களுக்குக் கிடைக்காமல் போனால் எதிர்காலத்தில் எங்கள் பற்றாக்குறை என்பது ஆயிரத்து நூறு மெகாவாட்டாக உயர்ந்துவிடும்! எனவேதான் அதை நாங்கள் எதிர்த்து வருகிறோம். மேற்கு வங்க மக்களுக்கு மத்திய அரசு இழைக்கும் மிகப் பெரிய அநீதி இது.

கல்கி: மத்திய – மாநில அரசு உறவு குறித்த சர்க்காரியா கமிஷன் அறிக்கை குறித்து உங்கள் கருத்தென்ன?

ஜோதிபாசு: நாங்கள் ஆட்சிக்கு வந்த 77 – லேயே மத்திய – மாநில உறவு குறித்து அறிக்கையொன்றைத் தொகுத்தோம். மத்தியில் அதிகாரங்கள் குவிந்து கிடப்பது இந்தியா போன்றதொரு பெரிய தேசத்திற்கு நல்லதல்ல; மாநில அரசுகளிடம் நம்பிக்கை வைத்து அவற்றுக்குத் தேவையான நிலையான அதிகாரங்களைக் கொடுப்பதன் மூலமே மத்திய அரசு பலம் பெற முடியுமே தவிர, மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் வெறும் போலீசையும் ராணுவத்தையும் கொண்டு மத்திய அரசு தன்னைப் பலப்படுத்திக் கொள்ள முடியாது என்பதை அப்போதே சொல்லியிருக்கிறோம். இப்போதுதான் ஒருவழியாகச் சர்க்காரியா கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. பொருளாதார விஷயங்கள் குறித்து எங்களுடைய பரிந்துரைகள் பல சர்க்காரியா கமிஷனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் வேறு பல அம்சங்கள் எங்களுக்குத் திருப்தி தருவதாய் இல்லை. இப்போது பூட்டாசிங் தலைமையிலான பாராளுமன்றக் குழு ஒன்று சர்க்காரியா கமிஷன் அறிக்கையை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தான் நாங்கள் மாநில அரசுகளுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறோம். ஏனெனில் சர்க்காரியா கமிஷனின் அறிக்கைக்குப் பிறகும் மத்திய அரசு அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுதானிருக்கிறது. இதுவோர் அபாயகரமான அரசியல் சூழ்நிலையையே உருவாக்கிவிட்டிருக்கிறது.

கல்கி: மாநில அரசுகள் தங்கள் அதிகாரங்களைப் பஞ்சாயத்து அளவுகளில் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கலெக்டர்களைச் சந்திக்கும் பிரதமர் கூறி வருகிறாரே?

ஜோதிபாசு: இரண்டாண்டுகளுக்கு முன்பு பிரதமர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில் ராஜீவ்காந்தி, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் அவர் சுற்றுப்பயணம் செய்த போது, ஏழை மக்களுக்காகச் செலவு செய்யப்பட்ட பணம் அந்த ஏழை மக்களுக்குச் சென்றடைய வில்லையென்றும், அதற்கான முயற்சிகள் பஞ்சாயத்து அளவில் மேற்கொள்ளப்படவில்லையென்றும், அதற்குக் காரணம் பஞ்சாயத்துக்கள் சரியாக இயங்காததே என்றும் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கடிதம் குறித்து எனக்கு மகிழ்ச்சியே! காரணம், மத்திய அரசிடமுள்ள அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதோடு, மாநில அரசிடம் உள்ள அதிகாரங்களும் பஞ்சாயத்து அளவில் பரவலாக்கப்பட வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அந்த வகையில்தான் மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் ஆண்டபோது, பதினெழு ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்படாமலிருந்த பஞ்சாயத்துத் தேர்தல்களையும் முனிசிபல் தேர்தல்களையும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பதினெரு ஆண்டுகளில் மூன்று முறை நடத்தியிருக்கிறோம். மாநில அளவில் திட்டக் கமிட்டி இருந்தால் மட்டும் போதாதென்று மாவட்ட அளவுகளிலும் திட்டக் கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். ஆக, பிரதமர் மாவட்டக் கலெக்டர்களைச் சந்தித்துப் பேசுவதால் அவர் சொந்த முறையில் திருப்பிவிடலாமே தவிர, மற்றபடி வேறு பலன்கள் ஏதும் இருக்காது. மாநில அளவில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதுதான் பலனளிக்கும்.

> "வங்க மக்களுக்கு மத்திய அரசு இழைக்கும் மிகப் பெரிய அநீதி இது..."

கல்கி: இப்போது எதிர்க்கட்சிகள் ஒற்றுமை குறித்து முயற்சி செய்யப்படுகிறது. இந்த ஒற்றுமை என்பது முன்பு 77 — இல் நடந்தது போலவே ஆகாது என்று எப்படிக் கூற முடியும்?

ஜோதிபாசு: உண்மைதான். வெறுமனே ராஜீவ் அரசைக் குறைகூறிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதற்கு மாற்றான நல்ல திட்டங்களை மக்கள் முன் வைக்க இடதுசாரியல்லாத கட்சிகள் முன்வர வேண்டும். அதுதான் நிரந்தர வினைவுகளை ஏற்படுத்துமேயொழியத் தனிப்பட்ட நபர்களின் தனிப்பட்ட பிரச்சனைகள் அல்ல. இதைக் கருத்தில் கொண்டுதான் ஏற்கெனவே இடதுசாரிக் கட்சிகள் ஒரு திட்டம் தீட்டி அதைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட வி.பி. சிங் முதலானோரிடம் காண்பித்தோம். அவர்களும் ஒரு திட்டம் தீட்டட்டும். அந்தத் திட்டம் எங்கள் கருத்துக்கும் ஒத்ததாக இருக்கட்டும். இவற்றின் அடிப்படையில் மதச்சார்பின்மை என்ற நிபந்தனையோடு நாங்கள் அவர்களை ஆதரிக்கத் தயாராய் இருக்கிறோம்.

கல்கி: உங்கள் கட்சியே தொடர்ந்து மூன்று முறை வெற்றி பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் உங்கள் கட்சிக்கு மக்களிடையே இருக்கும் செல்வாக்கா? அல்லது காங்கிரஸின் மேல் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு காரணமா?

ஜோதிபாசு: இரண்டும்தான்! முதல் முறையாக நாங்கள் வெற்றி பெற்றபோது எங்களுக்குக் கிடைத்தது பாலிடில் வோட்டுக்கள் அல்ல; காங்கிரஸின் நெகடிவ் வோட்டுக்கள்தான் என்றார்கள். இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் வெற்றி பெற்றிருக்கிறோமே! அதற்கும் நெகடிவ் வோட்டுக்களா காரணம்? ஏதோ கொஞ்சம் வோட்டுக்கள் அப்படியிருந்தாலும் பெரும்பகுதி எங்கள் கட்சிக்காகவே கிடைத்த வோட்டுக்கள்தாம்!

கல்கி: அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இ. காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறதே?

ஜோதிபாசு: அது மிகவும் குறைந்த பட்ச வோட்டு வித்தியாசம்தான். அது ஒரு பெரிய விஷயமே இல்லை.

கல்கி: டார்ஜிலிங்கில் மீண்டும் பழைய அமைதி திரும்பிவிட்டதா? நாங்கள் இந்தியக் குடிமகன் என்பதை முழுமையாக நிரூபிக்கும் வரை வெளியே வரமாட்டோம் என்கிறார், கூர்க்கா தலைவர் சுபாஷ் கூறியதாக..... செய்தி வெளியிடப்பட்டதாகவும்.....

ஜோதிபாசு: தேர்தலில் போட்டியிடும் உரிமை பெறும் போதே இந்தியக் குடிமகன் என்பது உறுதியாகிவிடுகிறதே. பிறகு என்ன? மேற்கு வங்க மாநிலத்தை விட்டுப் பிரிந்து போகும் எந்தக் கோரிக்கையையும் அரசு ஏற்காது. நான் நிருபர் கூட்டத்தில் பேசும்போது, 'நீங்கள் டார்ஜிலிங்கிலுள்ள வெறும் ஆறு லட்சம் நேபாளிகளுக்குத்தான் பிரதிநிதிகளாக விளங்குகிறீர்களே தவிர, மாநிலம் முழுவதும் பரவலாக இருக்கும் மற்ற நேபாளிகளுக்கு அல்ல...' என்று தெளிவாகக் கூறியிருக்கிறேன். அரசோடு நட்புறவோடு நடந்து கொண்டு டார்ஜிலிங் பிரச்னையைப் புனருத்தாரணம் செய்ய உதவுமாறும் கேட்டுக்கொண்டேன். பார்ப்போம்! ஏனெனில் டார்ஜிலிங் பிரச்னை என்பது மேற்கு வங்கப் பிரச்னை மட்டுமல்ல; அது ஓர் அகில இந்தியப் பிரச்னை!

கல்கி: மனிதனை மனிதன் இழுக்கும் ரிக்ஷாவை ஒரு கம்யூனிஸ ஆட்சியில் பார்த்து ஆச்சரியமடைந்தோம்!

ஜோதிபாசு: கல்கத்தாவிலுள்ள ரிக்ஷாக்களில் ஆறாயிரம் ரிக்ஷாக்கள் மட்டுமே சட்டபூர்வமாக லைசென்ஸ் பெற்றவை. சட்டவிரோதமாக இயங்கிய மும்மடங்கு ரிக்ஷாக்களில் இருபதாயிரத்தை ஒழித்துவிட்டோம். மற்றவற்றையும் சிறிது சிறிதாக ஒழித்துக் கொண்டு வருகிறோம். ரிக்ஷா ஓட்டுபவர்களில் பெரும்பாலானவர்கள் பீகாரில் வேலையிழந்த கிடைக்காமல் இங்கே பிழைப்புக்காக ஓடி வந்தவர்கள். நாங்கள் அதை ஒழிக்கும்போது அவர்களுக்குக் கஷ்டம்தான் என்பதை உணருகிறோம். இருப்பினும் அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக இங்கே ஒன்றும் செய்ய முடியாது.

கல்கி: கல்கத்தாவில் பல, ஏராளம் கட்ட

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
நெஞ்சை அள்ளும் ரகங்கள்.

பாக்ஸர்
ஜூம்பர்ஸ்
மிடில்ஸ்லீவ் ரகங்கள்

பாலியெஸ்டர், காட்டன், மஸ்தரி
மற்றும் பிரின்டெட் ரகங்கள்

உயர்தரமான தரிசுகொண்டு
தயார் செய்யப்பட்டது.
சமத்திற்கு உத்திரவாதம்.

ஆரஞ்சு ஃபேஷன்

26-A, 4வது மெயின் ரோடு, சி.ஐ.டி. நகர், சென்னை-600 035

மலர்கள்:

* பாக்யா ஜூவல் பாலஸ்டைல், அம்பாளடி ஜுவல்லரி காம்ப்ளக்ஸ், 285, ஆற்காட் சாலை, வடபழனி, சென்னை – 600 026. * வஸ்மி டெக்ஸ்டைல்ஸ், 24/3-A, டவுன் ஹால் ரோடு, கோயம்புத்தூர், திருச்சி – 620 001. * வாசல் டெக்ஸ்டைல்ஸ், மெய்ன் ரோடு, தாராபுரம் – 638 001. * ஸ்ரீ டாடி, 81, ரோஸ் கட் சாலை, காந்திபுரம், கோயம்புத்தூர் – 641 012. * ரித்து, 37, மாதா பில்டிங், மெயின் ரோடு, இன்றுக்கல் – 1.

Polyolefins Industries Ltd.

Mafatlal Centre, Nariman Point, Bombay 400 021
Phone: 202 4226 Telex: 011-3478 PIL IN

Manufacturers of:

Hostalen®
High Density Polyethylene

Rubber Chemicals

and

Hasti-HDPE Pipes, Barrels & Jerry Cans

Indenting Agents in India for:

- Bulk Polymers, Engineering Plastics, Polyethylene and other Waxes & Plastic Additive Systems manufactured by Hoechst AG.
- Polymers from Mobil.
- Range of Products manufactured by Monsanto U.S.A. and Associates.
- Graphite Chemical Equipments manufactured by Sigri Elektrographite GmbH, West Germany.

® Hostalen is a Registered Trade Mark of Hoechst AG, West Germany.

தாசம்வதாயம்

போனதும் பொருள்கள், கட்டில், விற்பனை, சமையற்பாத்திரம் பெரிய தொழிலதிபர், துணிந்து கடைசி வரை எதிர்த்து நிற்கும் போலீஸ் ஆபீஸரின் கதை, கழுத்தை நெரிக்கும் நோய், மருத்துவ ரீதியை, கண்களில் கோபம், வெறி.

கமலின் தங்கை மாதுரி, மாதுரிக்குப் பார்க்கப்பட்டிருக்கும் மாப்பிள்ளை – கமலின் கனிவு பெயரில் ஆபீஸர் ரவி, ரவியின் தங்கை பல்லவி. பல்லவி அழகு – போதை மருந்துகளுக்கு. பல்லவி போதை மருந்தின் காரணமாகத் தற்கொலை செய்து கொள்ள, அண்ணன் ரவி கோபமடைந்து வில்லனைத் தேடிப் போக, போன இடத்தில் வில்லன் எதிர்பாராமல் கொல்லப்பட்டு இறந்து போக, அந்தக் கொலையை ஒரு சிறுவன் மறைந்திருந்து பார்த்து விட – சுவாரஸ்யமான கதைப் பின்னல்தான் ஆரம்பத்தில்.

தங்கைக்கு நிச்சயம் செய்யப்பட்டவன் கொல்லப்பட்டால், வில்லனைத் தேடி அண்ணன் கொடுவருவதுதான் நாகரிகம். ஊஹூம், வில்லனைத் தேடிப் பிடித்து, சம்தரணம் செய்பவர் கமல். தீர்ப்பு தாத்தல், கார் தரத்தல், முடித் தூத்தல் என்று வில்லன்களைத் தூத்துகிறார், ராட்சஸ

வில்லன்.

சம்தரணத்திற்கு ஒரு சில மணிநேரம் தான் காத்திருக்கிறார். சினேகாவை போலும், நிரோஷாவின் முகவாயைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண்டு, தெரு அத்தியாயங்களை மாகத் தம் முகத்தைக் குனிந்து... கமலின் கையில் நிரோஷா ரப்பர், இழுத்த இழுப்பிற்கு வளைகிறார், புரள்கிறார், நளினிறார்!

சிரித்தே கழுத்தறுக்கும் வில்லன் பாத்திரத்தில் – ஐயோ மறுபடியும் பெட்டியா?

இந்த வில்லனை வைத்துச் செய்யும் முதல் படமாம். இடைவேளை வரை நன்றாக முறுக்கேற்றி கதையைக் கொண்டு போனவர் பிற்பகுதியில் கொஞ்சம் கவிழ்ந்து விட்டார். சாட்சிக்கு இருக்கும் ஒரே பையனை வில்லன் ஆக்கிவைத்து இரண்டு மணி நேரத்துக் கட்டியழுதத்தான் சரியாகச் சொல்லவில்லையென்றால், கமலின் தங்கை மாதுரி என்ன ஆனார் என்ற விவரமும் 'காணவில்லை' லிஸ்ட் இருப்பிலும்—

காமிரா – கண்ணன்; அமர்க்களம்.

மியூசிக் – இளையராஜா; வெரித்துப் பாடவே கருவறுப்பும் இருக்கிறது. விரு விருப்பும் இருக்கிறது.

— ஜெயமன்மதன்.

வன்முறைகளும் மிகவும் குறைவாக இருக்கிறதே, எப்படிக் கட்டுப்படுத்தினீர்கள்?

ஜோதிபாசு: இங்கே கட்டணம் குறைவாக இருப்பதென்பது ஒரு பாரம்பரியம்! இந்தியாவிலேயே குறைவாக இருக்குமிடம் இதுதான். அந்த நல்ல நிலைமையை நாங்கள் மாற்றவில்லை. மற்றபடி அதை உயர்த்த முடியாது. உயர்த்தினால் எதிர்க்கட்சிக் காரர்கள் கண்டிப்பாக இருக்க மாட்டார்கள். காரணம், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போதும் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தோமே!

கல்கி: பாட்டா போன்ற கம்பெனிகளில் லஞ்சம் தீண்டுகிறதே? மற்ற பெரு தொழிற் சாலைகளும் மூடப்பட வேண்டிய அபாயத்தில் இருப்பதாக 'லிட்டேல்மன்' பத்திரிகை தலையங்கம் எழுதியுள்ளதே?

ஜோதிபாசு: நானும் அதைப் பார்த்தேன். மிகவும் பெரிய பதற்றமிறார்கள். மத்திய அரசின் தவறான அணுகுமுறைகளினால்தான் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைத்தவிர வேறு காரணங்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

கல்கி: விரைவில் பொதுத் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் தமிழக மக்களுக்கும், கல்கி வாசகர்களுக்கும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ஜோதிபாசு: தேர்தல் வரப் போகிறதா என்ன? (சிரிக்கிறார்).

கல்கி: (நாமும் சிரிக்கிறோம்).

ஜோதிபாசு: வரப் போகும் தேர்தலில் தமிழக மக்கள் இ. காங்கிரஸைத் தோற்கடிக்க வேண்டும் – வீழ்த்த வேண்டும் என்பதே எனது விருப்பம். தமிழக மக்களுக்கும் கல்கி வாசகர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

மேலட்டை வண்ணப்படங்கள், மற்றும் மேற்கு வங்கம் தொடர்பான படங்கள்:

கே. வி. ஆனந்த்.


நாலவர், புன்குடி..
திருநாவுக்கரசு
அரங்கநாயகம்..
புல்புல்..புல்புல்..
புல்புல்..
பாதுகாப்புத் துறை
அதிகாரிகள் வீடு
மொழி
மொழி-
இறையன்
ஊழல்

கல்கி

1988 ஆகஸ்ட் 14
பக்கம் 47 இதழ் 2
விலை ரூபாய் 30

ஒப்பந்தத்துக்கு ஒரு வயது

இந்தியா – இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி ஓராண்டாகிறது. இந்திய அமைதிப்படை மீண்டும் விடுதலைப் புலிகளைத் தாக்கி ஆயுதங்களைப் பறிக்க முயல்கின்றன. விடுதலைப் புலிகள் கண்ணி வைத்து அமைதிப்படை மீளாத் கொல்கின்றனர். ஒரு முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. தேர்தல் நடப்பதாகவே குறியாக இருக்கவில்லை. சமூக வாழ்வு திரும்பவில்லை. 'போராளிகளின் ஒரு முக்கிய பிரிவினரை ஒதுக்கி விட்டுக் கையெழுத்தான இந்த ஒப்பந்தம் வெற்றி பெறுமா?' என்ற ஆரம்பத்திலிருந்த முன் எழுப்பப்பட்ட கேள்வி இன்னமும் தொடர்கிறது. இப்போதும் அர்த்தமுள்ளதாகவே இருக்கிறது!

தமது சார்பாளர்களைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அமைதிப்படையினர் என்று பெயர் சூட்டிக் கொண்டு என்னதான் வீர யுத்தம் செய்ய முடியும்? அரசு அல்லாதபோது விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அவர்கள் தங்கள் முடிவுக்கு வர உதவ முற்படுகிறது. எனவே அமைதிப்படையும் அவர்களிடம் பரிவுடன் கட்டுப்பாடும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் அப்பாவி என்ற எண்ணம் மக்கள் மனத்தில் ஏற்பட்டு விடாமல் கவனமாக இருந்து, அவர்களின் நன்மதிப்பைப் பெறப் பாடுபட வேண்டியிருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய ராணுவத்தால் இதைத் தவிர்க்க முடியாது.

சுமுக தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண முற்படுகிறது இந்தியா – இலங்கை ஒப்பந்தம். விடுதலைப் புலிகள் மட்டும் விட்டுக் கொடுத்து, ஒப்பந்தம் முழுமையாகச் செயல்படுத்தப்படுவதை வலியுறுத்தி வருகிறார்கள். இலங்கை அரசாங்கம் இணைப்பும் தேர்தலும் நடக்கவும் வழி பிறக்கும். தமிழர்கள் சுமுக நாடு என்ற ஒரு கோரிக்கை தவிர மற்றபடி அவர்கள் சுதந்திரமாக, சமரசங்களுடன் தலை நிமிர்ந்து, கௌரவமாக வாழலாம். தமிழும் தமிழர் பண்பாடும் சிறப்பிடம் பெறலாம். இன்று சுமுக தமிழனை நிம்மதியாக வாழ விடாமல் தடுப்பது விடுதலைப் புலிகளும் அவர்களுடைய ஒரு சில தனிநபர்களுமே. தங்கள் உரிமைகளுக்காக மற்ற ஒரு விஷயத்தை மக்களின் பொது நலன் கருதி விட்டுக் கொடுப்பதிலும் கூட ஒரு மகத்தான நிதானமும் நிறைவான கௌரவமும் இருக்கிறது என்பதை அவர்கள் உணரவில்லை.

விடுதலைப் புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு வரச் செய்ய வேண்டும், துணிகரமான முடிவுகளை ஏற்கச் செய்ய வேண்டும் என்று பலரும் சொல்லி வரும் முயற்சிகள் தோல்வி கண்டு வருகின்றன. இன்னும் சில காலம் இந்தியப்படைகள் இலங்கையில் இருந்து வந்தால் அதற்காகும் செலவுகளை இந்தியாவினால் தாங்க முடியுமா என்பது ஒரு புதிர்தான். அமைதிப்படை மீளாத் 'ஆக்ரமிப்பாளர்' என்ற எழ மக்கள் கருதுகிற மனோபாவம் வளரக் கூடிய ஆபத்தும் இருக்கிறது. கொரில்லா யுத்தம் என்பதை முழுவதுமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது என்பது அசாத்தியம் என்பதாகவும் பல எதிர்க்கட்சிகள் மூலம் சரித்திரம் நமக்கு உணர்த்துகிறது. அதற்காக எதிர்க்காரர்களை அரை குறையாக விட்டு விட்டும் வர முடியாது. அப்படி செய்தால் விபரீத விளைவுகளைத் தரும். அதே நேரத்தில் பேச்சு வார்த்தைகளுடன் கூடவே பேரம் நடக்க வேண்டும் என்ற இப்போதைய நிலை, தீர்வோடு முடிவு எதிர்பார்ப்பு அமைதிப் படை வீரர்களின் தொற்றுவிக்கக் கூடும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எந்த விதமாகப் பார்த்தாலும் விடுதலைப் புலிகள் இன்று வன்முறையைக் கை விடுவதும் அரசியல் பாதைக்கு வந்து மக்கள் மன்றத்தைச் சந்திக்கச் சம்மதிப்பதும் இன்றியமையாததாகிறது. இந்த மாறுதலை அவர்களிடம் ஏற்படுத்த அரசு, தான் மட்டும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் போதாது. தமிழகத்தின் முக்கிய தலைவர்கள் அனைவருமே இந்த விஷயத்தில் ஒருமனமான கருத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். விடுதலைப் புலிகளின் வன்முறைக்குத் தமிழக மக்களிடமும் தமிழகத் தலைவர்களிடமும் ஆதரவு இல்லை என்பது நிதர்சனமாக அவர்கள் நிச்சயம் அரசியல் பாதைக்கு மாறுவார்கள். இதில் தமிழக மக்களின் பெரும்பான்மைக் கருத்து என்ன என்பது விடுதலைப் புலிகளுக்கு உணர்த்தப்பட வேண்டும். இதனை மத்திய அரசு கண்டிப்பான முறையில் மேற்கொள்ளட்டும்.


"அப்பா வேலு வேலுன்னு கேட்டு
வாங்குவதில்லையா நீங்கள்?
காப்புறை வேண்டுமென்று
மட்டும் ஏன் தயக்கம்?
புதிய முகம்

Moods

விகடன் தபால்பெட்டி

•• கல்கத்தா தகவல் பொறுத்தவரை தம்மோ நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் தாம் முதன் முதலில் குடியேறியவர்கள் என்றாலும் மேற்கு வங்கத்திலுள்ள புருலியா மாவட்டத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அறுபது தமிழ் வைணவக் குடும்பங்கள் குடியேறிவிட்டன. அவர்களின் சந்ததியினர் இன்னமும் அம்மாவட்டத்தில் தான உள்ளனர் என்னும் விவரத்தில் மகிழ்ந்து மருகின்றனர்.

•• பம்பாயில் உள்ள செம்பூர், மாதுங்கா பகுதிகளைப் போலவோ நியூயார்க்கிலுள்ள ஹோல்புரூக் பகுதியைப் போலவோ கல்கத்தாவிலுள்ள எந்தவொரு பகுதியையும் முழுக்க முழுக்கத் தமிழர்கள் வாழும் பகுதி என்று சொல்ல முடியாது. முன்பு வேலை நிமித்தமாகச் சென்று தொழாரில் குடியேறிய சுமார் இருநூறு தமிழ்க் குடும்பங்கள் கூட இப்போது அங்கங்கே பரவலாகச் சென்று குடியேறி விட்டன!

•• தமிழர்கள் அனைவரும் ஒரே இடத்தில் வசிக்க முடியாமல் போய் விட்டதனாலோ என்னவோ, கல்கத்தாவிலுள்ள தமிழர் அமைப்புக்களும் சங்கங்களும் கூட அந்தந்த இடத்திற்கு ஒன்று என்கிற மாதிரி பலவாகப் பிரிந்து கிடக்கின்றன!

•• மே. வங்க அரசுப்பணியில் எத்தனைப் பதவிகளிலிருந்தால் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். முன்பு மேற்கு வங்க அரசின் தலைமைச் செயலராக இருந்த கிருஷ்ணன் ஒரு தமிழர். இப்போது மே. வங்க அரசின் உள்துறைச் செயலராக இருக்கும் கிருஷ்ணமூர்த்தி ஒரு தமிழர்! முன்பு தொழாரில் கலெக்டராக இருந்து தி. மு. நொட்டின் இருபுறங்களிலும் பிரிந்த ஆக்ரமிப்பாளர்களை அகற்றி அந்தச் சாலையைப் பயன்படுத்தும் அனைவரது நன்றிக்கும் பாத்திரமானவர் பாலசுப்ரமணியன் என்ற ஒரு தமிழர்! இப்படி ஏராளமாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

•• கல்கத்தாவுக்குச் செல்பவர்கள் அங்குள்ள தமிழர்கள் தொடர்புகளைக் கண்டு நம் கடனடியாக ஒரு பிரியம் ஏற்பட்டுச் சேர்பிடச் சென்றுவிட வேண்டாம். அப்படிச் செல்பவர்கள் நல்ல மனப் பக்குவமாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு போவது நல்லது. ஒரு காப்பியின் விலை ஏறக்குறைய முன்று ரூபாய். மனம் தோசை ஐந்து ரூபாய். இரண்டு இட்லி முன்று ரூபாய்... என்று பில் தொடங்க நேரும். தமிழ்நாட்டுப் பணிவு [illegible] மறப்பு!

•• [illegible] நண்பர்கள் தங்கி விருந்து ஒருநாளாவது மாடி ஒருநண்பர் காத்திருக்கிறார். அவர் உங்களை அழைத்துச் சென்று முதல்வர் ஜோதிபாசுவின் பத்திரிகைச் செயலாளரிடம் அறிமுகப்படுத்தி வைப்பார். அப்போது முதல்வரின் பேட்டிக்கான நேரத்தை ஏற்பாடு செய்துவிட்டு வந்து விடலாம். உடனே புறப்படுங்கள்" என்றார் நண்பர் க. க. மணி. எனக்கோ ஒரு நண்பருக்கே அதற்காக அத்தனை அவசரமாகத் தெரிய வேண்டுமா என்ற சொல்லுடன் நான் புறப்பட்டுக் கீழே செல்வதற்கு ஏறத்தாழ இருபது நிமிடங்களுக்கு மேலாகி விட்டது. நமது காருக்குள் பொறுமையாகக் காத்திருந்த அந்த நண்பர் என்னைக் கண்டதும் காரை விட்டுக் கீழிறங்கி வந்து நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு [illegible] கை குலுக்கினார். அவர்தாம் முன்பு தொழாரு கலெக்டராக இருந்து தற்போது மிதுனாப்பூர் மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றும்பாலசுப்ரமணியன்!

நம் மனதில் உள்ள ஒரு கலெக்டரை இத்தனை எளிமையாகப் பார்த்ததுண்டா? நமது வியப்பை அவரிடமே வெளிப்படுத்தினோம். "எல்லாமுன் வங்கமன்னவன் தனிக்குணம், எங்கள் முதலமைச்சர் என்னைவிட எளிமையாக இருப்பார். நீங்களாவது பார்க்கப் போகிறீர்களே..." என்றார் சிரித்தபடியே.

— நமது நிருபர்கள்.

நவ ஜீவன் நற்பணி மன்றம் – திருமலை-திருப்பதி.
ஸ்ரீ வெங்கடாசலபதி கோடி நாம ஜப எழுத்து வேள்வி சிலவேண்டுகோள்..

கோடி நாம எழுத்து வேள்வியில் கலந்துக் கொள்ளுங்கள். இவ்வரப் புனிதப் பயணமாக திருப்பதிக்கு வாருங்கள். இவ்வரலாக முழுமுதற்பொரு வெங்கி காச டாவர் பெறுங்கள். ஸ்ரீ ஏழுமலையானின் அருட் செல்வத்தை பெறுங்கள்.

ஸ்ரீ கலியுக கண்கண்ட தெய்வமான, வேண்டுவோருக்கு வேண்டியதை அளிக் கும் ஸ்ரீ வெங்கடாசலபதியின் அருட் சக்தி குறித்து யாவரும் அறிந்ததே. வாசக அன்பர்கள் மனக்கவலைகள் தீர்ந்து, உடல் ஆரோக்கியம் பெற்று பொருட் செல்வமும் பெறும் பொருட்டு ஸ்ரீ வெங்கடாசலபதிப் பெருமானின் திவ்ய நாமங்களை பல முறை தொடர்ந்து உச்சாடனம் செய்யுங்கள். மேலும், ஏகாதசி, திருவோணம் மற்றும் சனிக்கிழமை போன்ற முக்கிய தினங்களில் ஸ்ரீ ஏழுமலையானின் திவ்ய நாமங்களை பலமுறை எழுதுங்கள்.

சில ஆலோசனைகள்:-

மேற்குறிப்பிட்ட முக்கிய தினங்களில் உங்கள் குடும்பத்தில் எழுதத் தெரிந்த ஒவ்வொருவரும் ஸ்ரீ வெங்கடேசுவரப் பெருமானின் திருநாமத்தை ''ஓம் நமோ வெங்கடேசாய'' என்று 108 முறை எழுதி, திருப்பதி-திருமலையில் உள்ள எமது நவ ஜீவன் நற்பணி மன்றத்திற்கு தபால் மூலம் அனுப்பி வையுங்கள். நீங்கள் எழுதி அனுப்பும் படிவங்களை; பூஜையில் வைத்து உங்கள் சார்பாக பிரார்த்தனை செய்வித்து, ஸ்ரீ ஏழுமலையானின் பிரசாதத்தை தபால் மூலம் அனுப்பி வைக்கி றோம். இந்த கோடி நாம எழுத்து வேள்வில் கலந்து கொள்ள விரும்பும் ஆண்/பெ-கள் ஸ்ரீ ஏழுமலையானின் திருநாமத்தை பக்தி சிரத்தையுடன் 108 முறை எழுதி பூர்த்தி செய்து அனுப்பும் போது, அதனுடன் ஒரு சிறு தொகை அல்லது சிறிய புஷ்பத்தையும் சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம். மேலும் இவர்களின் கோவில் கையும் சேர்த்து அனுப்பவும். மேலும் இவ்வரப் புனிதப் பயணம் குறித்து, போதிய விவரங்கள் அடங்கிய அச்சிட்ட படிவங்களை Printed Form ஐ இவ்வரலாகப் பெற, தெளிவான பின்கோடுடன் தம்முடன் கூடிய கவர் விலாசமிட்ட ''வாய் கவரில்'' போதிய தபால்தலை ஒட்டி (மினிமம் ரூபாய் ஒன்று) கீழ் குறிப்பிட்ட அட்ரஸுக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

NAVJEEVAN SOCIAL WELFARE CENTRE
(A UNIT OF NBRC)
1-57, NORTH MADA STREET, NEAR SHANKAR MUTH,
P. O. TIRUMALA, VIA. TIRUPATI. PIN: 517504

சில விவரங்கள்:

திருப்பதி மாத்திரை - இலவச புனிதப் பயணம்

சுமார் 100 நாட்களுக்கும் 10 ஆயிரம் ஆன்மீகர்களை ஒன்று சேர்த்து இந்த கோடி நாம தூய எழுத்து வேள்வியை பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். கோடி நாம எழுத்து வேள்வியின் இறுதி கட்டமாக வரும் தீபாவளிப் பண்டிகையன்று (அக்டோபர் 8) குறைந்தப் சிட்டு முறையில் 108 ஆன்மீகர்களைத் தேர்ந்தெடுக்கப்படும். (திருப்பதியில் இருந்து அனுப்பப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதி அனுப்பும் வாசகர்களிலிருந்து மட்டும்) தேர்ந்து எடுக்கப்பட்ட வாசகர் களுக்கு உடன் சிறியதொரு தபால் மூலம் விவரம் அனுப்புவதுடன் அவர்களின் பெயர், வயது, மற்றும் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தம்முடன் பதிவிக்கையிலும் வெளியிடுவோம். உங்கள் இருப்பிடத்திலிருந்து திருப்பதிக்கு வந்து சென்ற, ஏற்பாடு செய்வதுடன், வாத்தியாரின் முத லில் பூஜைக்குரிய ஒரு வெள்ளி காக டாவுடன் மற்ற பிரசாதமும் இலவசமாக வழங்கு கிறோம். குறைந்தச் சிட்டம் வெளியாகத (தம்பர்) அன்பர்களுக்கும் விசேஷ பிரார்த்தனை செய்வித்து பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

மேற்கொண்டு விவரம் அறிவதற், அச்சிட்ட படிவங்களை இலவசமாகப் பெறவும், மேற் குறிப்பிட்ட அட்ரஸுக்கு எழுத வேண்டுகிறோம்.

''ஓம் நமோ வெங்கடேசாய.''

க்ரேட் ஷேக் பற்றி. சில உண்மைகள் உங்களை வியப்பில் ஆழ்த்திடும்.

க்ரேட் ஷேக். முழுமையான புரதச்சத்து ஆகார பானம்.

உலகிலேயே மிகச் செறிவான இயற்கைப் புரதச்சத்தின் மூலாதாரமான சோயாவிலிருந்து தயாராவது க்ரேட் ஷேக். ஏதோவொரு புரதம் நிறைந்தது அல்ல க்ரேட் ஷேக். இதில் உள்ளது, உங்கள் உடல் வளர்ச்சிக்கும், தசை வளர்ச்சிக்கும் மிகத் தேவையான உயர்ந்த புரதச்சத்து. இது, 22 அமினோ அமிலங்களில் 20 அமினோ அமிலங்களை, கல்வி விதித்தில் கொண்டது; இன்றியமையாத எல்லா 9 அமினோ அமிலங்களையும் கொண்டது.

க்ரேட் ஷேக் விட்டமின் நிறைந்தது— மாத்திரையோ மற்றதோ இன்றியே.

B காம்ப்ளெக்ஸ் விட்டமின்கள் செறிந்தது க்ரேட் ஷேக்; அத்துடன் A மற்றும் E விட்டமின்களும் இரும்புச் சத்து, பாஸ்பரம் மற்றும் கால்சியம் ஆகிய கனிமச் சத்துக்களும் செறிந்தது.

க்ரேட் ஷேக். ஆரோக்கியமான மாற்றுணவு

க்ரேட் ஷேக் கொழுப்புச் சத்து அற்றது. இம்மியும் கொலெஸ்டிரால் இல்லை. சில்க்கு அலெர்ஜியான, பன்னீர்பாலிலுள்ள லாக்டோஸ் அற்றது இது.

க்ரேட் ஷேக். சாப்பாடுகளுக்கிடை— யே ஒரு ஆகாரம்.

அடுத்த முறை பசிக்கும்போது, அதுவும் சாப்பாட்டு வேளை அல்லாத போது, சுலபமான க்ரேட் ஷேக் அருந்துங்கள்.

செறிவான, திருப்திதரும் இந்த சோயாமில்க் பானம் கலவைக்க பல மணங்களில் கிடைக்கிறது.

க்ரேட் ஷேக் சோயா கலவைக்க ஏற்ற உணவு பானம்.
உலகிலேயே மிகச் செறிவான புரதச்சத்தின் மூலாதாரம்.

தயாரிப்பாளர்: சோயின் சோயா ஃபுட்ஸ் லிமிடெட்,
விநியோகஸ்தர்கள்: [illegible]

கால்பந்தாட்டத்தில் காதல் என்?

'கிரிக்கெட் பத்தாட்டமைதானத்தில் பந்தை உதைக்கிற உதைதான் கல்கத்தா மார்க்கெட்டில் மீன் விலையை நிர்ணயிக்கிறது' என்று சொன்னால் நம்புவது கஷ்டம்தான். ஆனால் அதுதான் நிஜம்! மார்க்கெட்டில் 'சிங்கிடி' மீன் வகைக்கு யானை விலை சொன்னால் அன்றைய கால் பந்தாட்டப் போட்டியில் மோகன்பகான் அணி 'வெற்றி பெற்றிருக்கிறது' என்றும் 'ஹில்ஸா' வகைக்குத் தொங்கி எடுத்தால் கண்ட் பெங்கால் அணி வெற்றி பெற்றிருக்கிறது என்றும் அர்த்தம். ஆம், மோகன் பகான் அணி ரசிகர்கள் தங்கள் வெற்றியைச் சிங்கிடி மீன் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டாடினால், கண்ட் பெங்கால் அணி ரசிகர்கள் தோல்வியை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டாடுவார்கள். அந்த அளவுக்கு கால் பந்தாட்டத்தின் மீது வங்காளத்திலுள்ளவர்களுக்கு ஒரு வெறி.

இந்த வெறிக்கு என்ன காரணம்?

அப்போதெல்லாம் கிரிக்கெட் என்பது இந்தியா பிரபுத்வமை ஆங்கிலேயர்கள் கூட கால் பந்தாட்டத்தில் தான் அதிக ஆர்வம் காட்டினார்கள். அதைப் பார்த்து வங்காள முக்கால் பந்தாட்டம் ஆழம் பழகித் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டார்கள். 1911 — ல் ஆங்கிலேய அணிக்கும் இந்திய அணிக்குமான கால் பந்தாட்டப் போட்டியில் ஆங்கிலேய அணியை இந்திய அணி மண் கவ்வச் செய்து வென்று விட்டது. வங்க மக்களுக்கு ஏக குஷி! தும்மை ஆளும் ஆங்கிலேயர்களையே தோற்கடித்தவர்கள் என்று அந்தக் கால் பந்தாட்ட வீரர்களை மிக மரியாதையோடு பார்த்துக் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள். அதனால் அந்த கால்பந்து விளையாடுவதும் அதைப் பார்ப்பதும் ஒரு கௌரவமான விஷயமாகிவிட்டது.

அப்படித் தோன்றியவைதான் இன்றைக்

ருக் கல்கத்தாவில் மிகவும் பிரபலமாயுள்ள மோகன் பகான், ஈஸ்ட் பெங்கால், முகமதி வன்போர்டிங் ஆயெரன்றுகாய்பந்தாட்ட அணிகளும், நல்ல காய் பந்தாட்ட வீரர்களைக் கண்டால் இந்த மூன்று அணிகளும் ஒன்றுக்கொன்று போட்டி. போட்டுக் கொண்டு அந்த வீரர்களை, நம் ஊரில் ஜூ.அணியினரும், ஜெ. அணியினரும் எம்.எல். ஏக்களைக் கடத்திக் கொண்டு போன மாதிரி எங்காவது கடத்திக் கொண்டு போய் வைத்துத் தங்கள் அணிக்கு சான்று அவர்களிடம் கான்ட்ராக்ட் போட்டுக் கொள்ளுமாம்!

வங்க மக்களுக்குக் கால்பந்தாட்டத்தின் மீது ஏற்பட்ட காதலின் ஆரம்பம் தேசப் பற்றின் அடிப்படையில் ஏற்பட்டதோர் தன்னிகரில்லாத விஷயம்தான் என்றாலும் அதன் இன்றைய வளர்ச்சி மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை. காரணம் ஆட்டம் முடிந்த பிறகு வெற்றி பெற்ற அணி ரசிகர்களுக்கும் தோல்வி அடைந்த அணி ரசிகர்களுக்கும் இடையில் ஏற்படும் கலாட்டாக்களும் உயிர்ச் சேதங்களும்தான். ஒருமுறை இப்படி நடந்த கலாட்டாவில் பதினாறு பேர் உயிரிழந்தனர் என்பது எத்தனை பெரிய சோகம்!

ஒரு விளையாட்டில் எத்தனைதான் ஆர்வம் இருந்தாலும் அந்த விளையாட்டில் ஏற்படும் வெற்றி தோல்விகளையும் விளையாட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டாமா? அப்படியில்லையே என்பதுதான் நமது ஆதங்கம்.

— மௌனம்மி.

வானதி வழங்கும் பக்தி நூல்கள்

சு. வை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருள்வாக்குகள் (ரா. கணபதி தொகுத்தது)

தெய்வத்தின் குரல் (முதற் பகுதி) 45.00
தெய்வத்தின் குரல் (இரண்டாம் பகுதி) 55.00
தெய்வத்தின் குரல் (மூன்றாம் பகுதி) 55.00
தெய்வத்தின் குரல் (நான்காம் பகுதி) 60.00

ரா. கணபதி

அன்னையின் அன்பை 55.00
(ஸ்ரீ ரமணரின் அன்னை பற்றிய நூல்)

ஒரு புதிய வியாசரின் தரிசனம் (வியாசரின் வாழ்க்கை) 10.00

ஜயஜய சங்கர (ஆதி சங்கரரின் வாழ்க்கைத் தத்துவங்கள்) 25.00

இ. வேங்கட ரெங்கண்ணங்கார்

கம்பராமாயணம் உரை நடை 30.00
மில்டன் பாரதம் உரை நடை (நான்கு பாகங்கள்) 55.00

ஆர். சங்கரநாராயணன்

நடமாடும் கடவுள் (ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் திவ்ய சரித்தம்) 12.00
காஞ்சிப் பெரியவர்கள் பொன் மொழிகள் 7.00

ஞானக்கடி அருணகிரி

ஆலயங்கள் எழுதாத வரலாறுகள் 12.00

தலத்திரு கந்தர் சுவாமிகள்

பெரியபுராணத்தில் எழுதாத சோக்கு 10.00

தெனிலி எழில்மணி

கலைவாணி பிறந்த பேரொளி 4.00
தெய்வ அருட்பாடல்கள் 3.00

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் அருள்வாக்கு

தெய்வ வாக்கு 20.00
இந்து தர்மங்கள் 5.00
இந்து தர்ம விளக்க வினாடி 5.00

யாக்குலஸ்லெப்ரியர்

இந்தமத வேதத்தின் மகிமை 15.00

திருமுருக திருப்புகழ் வாரியார்

திருப்புகழ் விரிவுரை 40.00
(திருப்பரங்குன்றம், திருச்செந்தூர்)
திருப்புகழ் விரிவுரை (பழனி) 55.00
திருப்புகழ் விரிவுரை (சுவாமிமலை) 15.00
கந்தரனுபூதி 10.00
கந்தரலங்காரம் 20.00
கந்தவேள் கருணை (கந்தபுராணம்) 35.00
வாரியார் விரிவுரை விருந்து 25.00
நகம் 3.50
வாரியார் வாக்கு 7.00
வெகுட்செல்வர் (பெரியபுராணம்) 25.00
பெண்குலப் பெருமை 20.00
மங்கையர்மணிகள் 35.00
வாரியார் வழங்கும் மணவாழ்வு 35.00
திருப்புகழ் முருகனும் (சுருக்கம் மட்டும்) 50.00

ஜெயந்தஸ்ரீ

குழந்தை சதகம் பாடல்கள் 4.00

சதுரகி

ராமாயணம் 20.00
மகாபாரதம் 20.00
ஆத்திசூடி 5.00
கைவினைக்கு 12.00
கண்ணன் காட்டிய வழி 10.00
பழகுவோம் 4.00

- தேவையான புத்தகங்களை V.P.P.யில் பெற வேண்டி எழுதுங்கள். V.P.P. தபால் செலவு தனி.
- புத்தக விபரப்பட்டியல் பல்வகை — சுவாரசியமான நூல் நிலையங்களுக்குத் தக்க வழிவகை உண்டு.
- வானதியில் இல்லாத புத்தக விலைப் பட்டியலுக்கும் கடிதம் எழுதுங்கள்.

விபரங்களுக்கு:

வானதி பதிப்பகம்

**23, தீனதயாளு தெரு, (இ. தகர் தபால் நிலையம் எதிரில்),
தி. நகர், சென்னை — 600 017. போன்: 442810**

அரசாங்க நிலையும் சீரழிவும் - 1988
ரூ.750 கோடிப் பற்றாக்குறை

அதிகாலை துர்கா மண்டிக்குக் கோலம் போட வெளியே வந்த அம்மா குட்கேயும் வையுமாக வந்து நின்ற தாரிணியைப் பார்த்து அப்படியே திகைத்தாள். ''என்னடா... ஒரு லெட்டர் கூடப் போடாமல்?''

ஏதோ சொல்ல வாயெடுத்த தாரிணி சுற்று முற்றும் பார்த்து, 'இங்கே வேண்டாம்' என்பது போல் உள்ளே தயங்க, தித்தி தெருக்கடை தாய் மீன்தொட்டி தாண்டி வீடு வந்ததும் கடைத்தான் தாரிணி.

''போகச் சொல்லிட்டாங்கம்மா.''

''சொல்லிட்டாங்களா... யாரு?''

''என் மாமனார்... மாமியார்.''

''அடப்பாவி!''

''அவருதான்.''

''நீ எதுத்துப் பேசலையா?'' பதறினாள்.

அவள் பேசாமலிருந்தாள்.

''என் மேல் தப்பில்லை'' என்றாள் அவள் மீண்டும்.

'ஓ.கே' என்று அவளை விரட்ட முயன்றாள். விரட்ட விரட்ட அந்த உருவமும் கோணலாக்கிய அந்தக் குரலும் அவள் கண்ணிலிருந்து விட்டு அகல மறுத்தன. மீண்டும் அந்தக் கசப்பான சம்பவம் அவள் மனமுள் விரித்தது.

வழக்கம் போல் மாமியார்தான் அன்றைக்கும் பேச்சை ஆரம்பித்தாள். மகனைப் பங்கிட்டுக் கொண்ட வத்தலும் அதற்குண்டான விலையையும் சரியாகத் தரவில்லையென்பதால் இரட்டிப்பான ஆத்திரத்துடன்.

''இப்படி ஏமாத்திக் கொண்டே போனால்என்ன அர்த்தம்? இலவிக்குரண்டு ஒண்ணு தெரிஞ்சாகணும். எங்களுக்கும் கையேந்த வேண்டிய பொண்ணு இருக்கு வீட்டிலே. இதோ பாரும்மா, சந்திரனுக்குப் பிடிச்சிருந்ததென்னுதான் இதைவிடப்பெரிய இடத்தை எல்லாம் விட்டுவிட்டு உன்ன வீட்டில் சம்பந்தம் வெச்சுக்கிட்டோம். அதுக்காக இப்படியா கடன் கொண்ட குத்தாசித்தைத் தராமல் இழுத்தடிக்கிறது?''

''அதானே? உங்கப்பன், என்னைச் சரியான இளிச்சவாயன்னு நினைச்சிட்டான்.'' என்று எழுந்து வந்தார் மாமனார். பாக்கி குத்தாசித்தையும் அப்புறம் தர்றோம்னு சொன்னப்பவே எனக்குச் சந்தேகம்தான். இருந்தாலும் மனுஷனுக்கு மனுஷன் இதுகூடச் செய்யாட்டி எப்படின்னு நினைச்சுச் சம்மதிச்சேன். இப்ப மாசம் மூணாச்சு. லெட்டர் மேலே லெட்டர் போட்டாச்சு. தெரியுமோ போய்க் கேட்டாச்சு. ஒரு பைசா வரலே.''

''அதான் மகன் மருத்துவச் தானி ஏறி வாச்சே. இனிமேல் என்ன செய்ய முடியும்னு நினைப்பு!''

''பேராசை அத்தை. இன்னும் ஒரு வாரம், அதுக்குள்ளே எப்படியும் புரட்டி அனுப்பிட றேன்னு அப்பா லெட்டர் போட்டிருக்கார்.''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். இதோ பாரும்மா, என் மேலே வருத்தப்படாதே. காலம் கெட்டுக் கிடக்கு. இன்னே இவ்விடம் தவறிச்சின்னு விழுந்து நெருப்புப் பிடிச்சாலும் தான்தான் உன்னைக் கொண்டோம்னு சொல்வாங்க. நமக்குன்னே

புதிய சுவடுகள்

எரிந்தெனியாக வெடித்தான். ''எத்தனை நாட்கள் கொன்றது? எத்தனை லெட்டர் போட்டேன்? ஒன்னுமே செய்யாமல் இப்படி இருந்தா?''

''என்னம செய்வது? உனக்குத் தெரியாதா? அப்பாவும்தான் அலையறாரு. தெருப்புத் தேய அலுவலகத்தைவே? அதுக்குள்ளே அவசரப்பட்டுட்டே... என்னதான் சொன்னாங்க?''

''ஒண்ணே வார்த்தை. வத்தல் பணம் தொற வா.''

''நீ கவலைப்படாதேம்மா,'' என்றொரு குரல் அவள் தொளுக்கும் பின்னாலிருந்து கேட்டது.

''அப்பா நீங்க இங்கேயா இருந்தீங்க?''

''கேட்டுட்டுத்தாம்மா இருந்தேன். நீ ஒண்ணும் அவசரப்பட்டுக் கொள்ளாதேம்மா. நான் இப்பவே புறப்பட்டுப் போய் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களைப் பார்த்துப் பேசி எப்படியாவது சமாளிக்கிறேன். நீ கவலைப்படாமல் இங்கேயே இரும்மா.''

''இருக்கிறேம்பா. நான் வேறே எங்கே போவேன்?''

தாரிணி தான் கடையோரம் பிய்ந்து விடை கொடுத்த தலையணையை மீண்டும் தஞ்சமடைந்தாள்.

'என் மேல் வருத்தப்படாதே தாரிணி!' கண்ணுக்குள் நின்ற சந்திரன் சொன்னான்.

வண்ணதாசன்



"டேய் மைதா, எத்தனாம் கொண்டை படிக்கிறே....?"

"அஞ்சாம் கொண்ட மாமா....!"

"வாத்தியார்கிட்டேயும் ஒழுங்காப் படிப்பிக் கூட்டத்துக்கு வராங்களாடா...?"

— கருடகுமார் தெளப்பாறிப்பிள்ளை.

வீங்க தகராறு வேண்டாம். நீ இன்னிக்கே புறப்படு. உனக்கு ரயில் டிக்கெட் எடுக்கத் தான் சத்திரம் போறிருக்கான்."

அப்போதுதான் சத்திரமை எங்கே காணோம் என்ற கேள்விக்குவிடை கிடைத்து அலறுகிறது.

"ஆமா, நீ புறப்பட்டு," என்றார் மாமனார்.

வெறுமனே, கதறினாள். பதிலளிக்கவில்லை.

அறைக்குள் வந்தால் சத்திரம் ரயில் டிக்கெட்டோடு நின்றிருந்தான். "என் மேல் வருத்தப்படாதே தாயி," என்றான். "அம்மா சொற்ற மாதிரி செய்வதுதான் சரின்னு படுது எனக்கு. உங்கப்பா இப்படி ஏமாற்றல்...

"கூடாதுதான்க. ஆனா அதுக்காக, நான்... என்னை... நிரந்தரத்தான் என்னைப் போகச் சொல்றீங்களா...?"

அவள் பார்வை தாழ்ந்தது. கையிலிருந்த ரயில் டிக்கெட் நிறம்நிறம் என்று கலிழ்ந்தது.

இவளை உன்னைத்தான் கல்யாணம் பண்ணுவேன்னு அன்று சொன்ன நீதானா? கனவில் வந்த ராஜகுமாரன்!

"என் மேல் தப்பில்லை," என்றான் சத்திரம். "அன்னிக்குப் பெண் பார்க்க வந்தப்போ உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொன்னது வாஸ்தவம் தான். அந்தச் சமயத்திலே ஒரு சின்ன பைசா வாத்தியாரை நாமட்டுன்னு சொன்னாங்க. கூட எங்கப்பா அம்மாவோடு சேர்ந்து உன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பேன். ஆனா உங்கப்பா முப்பது பவுன் நகை போடறேன்னார். பத்தாயிரம் ரூபாய் தர்றேன்னார். அப்படிச் சொன்னவர் இப்படி ஏமாத்தினா எப்படி? முடியாதுன்னு ஏன் தர்தாச் சொல்லணும்? இதைப் பாரு, நான் விட்டுத் தரலாம். ஆனால் ஏமாறத் தயாரில்லை. இதை நீ நல்லாப் புரிஞ்சுக்கணும்."

அவளுக்கும் புரிந்தது. அவனுக்கு அவள் உணர்ச்சிகளை முக்கியம். அவளுடையவை?

"புரியுதுங்க. உங்க நல்ல கல்யாணத்தில் எனக்கும் பொறுப்பு இருக்குதுங்க. எங்கேயாவது எனக்கு ஒரு வேலை தேடுங்க. பத்துப் பத்திரம் தேய்ச்சாவது எங்கப்பா தரவேண்டிய பணத்தை நான் படிப்படியாத் தர்றேன். விட்டுத்த மட்டும் போகச் சொல்லாதீங்க, ப்ளீஸ்."

அவன் மெல்லத் திட்டத்தில் வந்தான். ஆறுதலாய்த் தோள்களைத் தடவினான். "நீ என்ன அம்பேலேவா இருக்கப் போறே? உன்னை அனுப்பி வெச்சதான் உங்கப்பா பணத்தைத் தேடி வெப்பாரு. அப்புறம் நீ வந்திடப் போறே. இதைப் போய் நீயும் நானே ஒரு பிளான் நீ எடுத்துக்காதே. நீயும் நானும் இதிலே ஒரே வலை."

அவளையும் சொல்வதற்குள் அவனுக்கு வேர்த்து சிந்தத்த வார்த்தை. இப்போது அவன் இன்னும் கேவலமாகத் தெரிந்தான். கோபத்தில் அவளை விரட்டியிருந்தால் கூட ஏதேனும் ஒரு தளத்தில் வைத்து அவளைப் புரிந்து கொண்டிருப்பான்.

இவன் கோழை. சமயத்திலும் நிற்பத்திலும் சரியாகாதவன். அதனால் தான் பெண் பார்க்க வந்த இடத்திலும் அப்படி நடந்து கொண்டான். இப்போதும் இப்படி நடந்து கொண்டிருக்கிறான். அப்போது சமயம். இப்போது நிர்பந்தம். அப்போது சமயத்தைக் காதல் என்று புரிந்து கொண்டது எப்படி தவறோ அது போலவேதான் இப்போது நிர்பந்தத்தைச் சமர்த்தியம் என்று நினைப்பதும். இவன் கோழை. நிர்பந்தங்களுக்குப் பணிபவன். பணிந்து மனைவியைக் கைவிடுபவன். இதோ கை விட்டும் விட்டான்.

அவள் குட்டலை எடுத்தாள். "நான் துணியை எடுத்து வைக்கிறேன்", என்ற வலை நிரந்து விடுவது போலப் பார்த்தான்.

அப்பா மறுநாளே புறப்பட்டுப் போனார் மாப்பிள்ளை வீட்டுக்கு. போய்ப் பிரயோஜனமில்லை என்று அவளுக்குத் தெரியும். என்றாலும் தடுக்கவில்லை.

இரண்டு வந்தார் முகத்தில் என்னும் கொண்டும் வெடித்தன.

"என்னங்க சம்பந்திட்டீங்களா?"

"எங்கே? அவங்களுக்கு முன்னும் அவசரமில்லையாம். நாமமாதிரி காலத் தள்ளிட்டா கட்டியும் சேர்ந்து அவளை எப்படி வேணுமின்னாலும் அனுப்பி வைக்க வாதம்.

"சே, சரியான பணப் பிசாசுங்க."

"நீ கவலைப்படாதேம்மா," என்றார் இவளிடம்.

"நான் கவலைப்படலேப்பா", என்றாள் அவர்கள் நம்பவில்லை.

அடுத்த வாரம் பெங்களூரிலிருந்து தந்தை வந்தார். அப்போதான் வரும் எழுதி வரவழைத்திருக்க வேண்டும். அவரை மத்தியஸ்தத்துக்கு அனுப்பி வைத்தார்கள். ஏமாற்றம்.

"அவங்க ரொம்ப பிடிவாதமாக இருக்காங்க. நம்மாலே முடியாதுப்பா. நீ எப்படியாவது பணத்தைப் புரட்டப் பார்", என்று சொல்லி விட்டு, "எங்கே நம்மிடம் கேட்டு விடப் போறாரோ," என்று அவசரமாகப் புறப்பட்டார்.

அப்புறம் வரவிருந்து பெரியப்பா,

கங்கைபோல் கரைபுரளும்
புது ரக பட்டுப்புடவைகள்
மங்கை சில்க்ஸில் கிடைக்குதே
மங்கையர் கூட்டம் குவியுதே...

காஞ்சிபுரம் மற்றும்
அனைத்து மாநில
பட்டு புடவைகளுக்கு...

மங்கை சில்க்ஸ்

ஏ.சி - கன்டிஷன்ட்

Y.M.C.A. காம்ப்ளக்ஸ் ரகை கடை பஜார்,
மதுரை-625001 போன்: 36040

அழுக்கை அகற்றுவீர் எஞ்சல் காரும் வழியினிலே!

3 வருட இலவச சேவை+2 வருட உத்திரவாதம்

விலை ரூ.2550/-

இல்லத்தரசிகளின் இனிய தோழி!

ஏஞ்சல்

வாஷிங் மெஷின்

முழுவதும் எவர்சில்வர்

- பைபர் கிளாஸ்
- வாஷர்-கம்-டிரையர்
- டிரையர் மட்டும் உள்ள வசதி
- நிவர்ஸிபிள்
- எலக்ட்ரானிக்

ஏஞ்சல் டொமெஸ்டிக்
எக்யுப்மெண்ட்ஸ்
கோயமுத்தூர்-641 025.

Approved by TAMILNADU QUALITY CONTROL CENTRE.

டீலர்ஷிப்புட்டன்ஸ்: □ ஸ்ரீ சக்தி மோட்டார்ஸ், சென்னை-5 போ: 843018 ● 843026 □ மகாலட்சுமி ஸ்டோர்ஸ், கோவை-18 போ: 33408 ● 38401 □ ஸ்ரீ முருகேஷ் கார்ப்பரேஷன், மதுரை-1 போ: 32488, 32481 ● 37879

டீலர்ஸ்: ● மெஸர்ஸ் கார்ப்பரேஷன், திருச்சி-2 போ: 29281 ● மெஸர்ஸ் மஹாலட்சுமி ஸ்டோர்ஸ், ஈரோடு-1 போ: 73177, 73515 ● மெஸர்ஸ் பிரபுசேல்ஸ், திரன் போ: 444821 ● ஆட்டோ ஸ்டோர்ஸ், சுவாமிமலை, போ: 420256 ● ஸ்ரீ வேலாயுத ஸ்டோர்ஸ், கோவில் பாக்கம், போ: 426458, 426296 ● T.V. எலக்ட்ரானிக்ஸ், பொள்ளாச்சி போ: 610315 ● மீனாட்சி மாச்சைன்ஸ் ஏஜென்ஸி கோவில்பட்டி, தூத்துக்குடி ● ஸ்ரீ [illegible] மார்க்கெட்டிங், சென்னை-3 ● ஸ்ரீ [illegible] ஸ்டோர்ஸ், தஞ்சாவூர்-1 போ: 24986 ● S.S. [illegible] திருவண்ணாமலை-606603.

கொண்டிருந்து மாமா. ஏன், கல்யாணம் பேசின தாலைக் கட விட்டு வைக்க வில்லை அப்பா.

தாரிணி எதிர்பார்த்துக்கொண்டிருந்த கேள்வி மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எல்லாருக்கும் தோன்றியே ஏற்பட்டது. ஒரு வேளை திருமணி வந்து அவர்கள் பக்கத்து நியாயத்தைப் பேச ஆரம்பித்து விட்டனர்.

"என்ன, மாதேவன், என்னிடமிருந்தாவது நீ கொஞ்ச கொண்டிய தொகையாவே? இப்ப கொடுத்திடறதுதான்... நல்லது. கொடுக்கிற வழியைப் பாரு....."

எரிச்சலாக கொடுத்தார் மாதேவன். "ஆமாமா, கொண்டேன். அதுக்காக? ஒரு மனுஷருக்குப் பணமுடை வராதா? வீண பாதிலேயே கட்ட வேண்டி போது ஒரு சமயம் விஷயத்தில் கொஞ்சம் பொறுத்துக்கக் கூடாதா?"

அம்மாவும் முணுமுணுத்தாள். கொஞ்ச நாட்களாய் அவள் பேச்சிலும் ஒரு மாறுதல். வேலைக்கு வேண தாரிணியைச் சமாதானப்படுத்தித் தொடர்ந்து படிக்க வைத்தது இப்போது வேண கிடைத்திருப்பதெல்லாம் அவளை இந்தக் கட்டத் தவிக்கவில்லை.

"உனக்கும் கொஞ்சம் சமாதானம் வேணும்பு. இன்னும் மாசம் அந்த வீட்டில் இருந்திருந்தே, புருஷனைக் கையில் போட்டுக்கத் தெரியலையே...?"

"நான் என்ன....?" வாய் வரை வந்த வார்த்தைகளை அடக்கிக் கொண்டாள். "புருஷனைக் கையிலே போட்டதா? அதுக்காகவாம்மா நான் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்? அப்படி அவனைக் கையிலே போட்டுக் கொண்டு அவரோட வாழ்ந்து கெடக்கிற கஷ்டமா எப்படியாவது மனசிலே உறுதியா அனுபவிக்க முடியும்? .....ம், உனக்குப் புரியாது."

நேரம் போனது போது வீட்டுப் போன ஈஸ்வரி தி சம்பந்தமாக எதற்கும் படிக்க ஆரம்பித்தாள். பாட்டைக்கும் அம்மாவைக் போட்டாள்.

ஆறு மாதம் ஓடி விட்டது.

பரீட்சை எழுதிய கெண்டிலிருந்து தினமும் வாயில் கொண்டு வீட்டிலும் தாரிணியும் அம்மாவும் அப்பாவும் ஒரு ஆகவென்று பேசிக் கொண்டிருக்கவே முடியாத் தவிக்கினர்.

இருந்தாலும் காதில் விழாமலில்லை.

அதாவது தாரும் நினைத்தாள். மாமா ஆசான் இப்படியே விட்டு வைத்தால் அவர் புறம் சென்னை கல்யாணத்துக்கு அதுவே ஒரு இடைஞ்சலாகிடும் பாருங்க.

"அம்மா, வரதி கல்யாணத்துக்கு அந்தத் தொகையை ஒதுக்கிடலாம்னுதானே இவ்வளவு நாட்கள் கடன் வைத்தே? பொண்ணு பார்க்க வந்தப்போ அப்படி வாக்குப் பேசித் தானேன்று ஒரு விலையாட்டி விலையாடிப் பார்த்தேன்."

"அவளைச் சொல்லிக் குற்றமில்லேங்க. தம்பட்ட கெட்ட பொண்ணு. வலைக்குப் போட்டுக்கத் தெரியலே... அவ வெளியே போயிருக்கா. வந்தும் பணம் புரட்டிட்டு நாம் கொண்டுக்க. இன்னிக்கே பாங்கி லிருந்து எடுத்துக் கொடுத்திடுங்க."

ஐம்பது, நூறாயிரம் ரூபாய். இந்தாது ரூபாய் வட்டி வேறே தரணும். நடுக்கு நடுங்கினாள்.

"எப்படியா வந்தே'வுக்கு "இப்பதான்" என்றாள் தாரிணி.

"உனக்கு ஒரு சந்தோஷச் செய்தியம்மா. நீ நாளைக்கே உன் புருஷனோட போய்ச் சேர்ந்துக்கப் போற. அவங்க கேட்ட தொகையை ரெடிபண்ணி முடிச்சுட்டேன்."

"என்னங்க, ஆத்தாதிடே போய் நீங்க பட்ட பாட்டையெல்லாம் சொல்லிக் கொண்டு! நீ துணியையெல்லாம் எடுத்து வையம்மா. இந்தாங்க, நீங்க மாப்பிள்ளைக் குத் தந்தி கொடுங்க."

"வேண்டாம்பா, நானே புறப்பட்டுப் போய்க்கறேன். நீங்க டிக்கட் எடுத்து வாங்க."

தலையை எடுத்து அறிவித்தார். வீட்டைச் சுற்றி சென்று நின்றுவிட்டு வந்தார் அப்பா.

ரண்டு மாதங்கள் பொறுத்து ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை.

"என்ன மாப்பிள்ளே மாமா", என்றவாறே வாசலில் தயங்கிய மருமகனைப் பார்த்து விரித்தார் மாதேவன்.

"தாரிணியைத் திருப்பி அனுப்பி வைச்சது தப்புத்தான்ங்க. நான் தான் உணர்ந்திட்டேன். அவளுக்கு எப்படியோ, அவள் இல்லாமல் வாழ என்னால் முடியலே. அவளை அழைச்சிட்டுப் போகத்தான் வந்திருக்கேன்."

"அழைச்சிட்டுப் போகவா? அப்ப தாரிணி... தாரிணி அங்கே வரலையா? தனியா வண்டி தாரிணி தம்பை வேகம் பண்ணிட்டுப் போயிட்டானே... கெட்டி வரலைன்னதுமே சந்தேகப்பட்டேன்."

அம்மா அழத் தொடங்கினாள்.

அப்பா தாரிணியின் தூரி படித்த வேறு வைப் புரட்டினார். இழுத்த புகையுக்குள் எரிந்த புகைப் அவளைவாகக் கிடந்தது. ஆறு மாதமே செல்லுபடியாகும் என்ற வாசகத்துடன் அந்த ஜன்னிரம் ரூபாய் நோட்.

கடலே ஒரு நடுப்பும் இருந்தது.

"அப்பா அம்மாவுக்கும் (தெரு வந்தால்) வரவேற்கும்....

உங்களைப் போலவே பிறந்தவரையும் வாழ்க்கையையும் முடிக்கப் போட என்னால் முடியவில்லை. இந்த வெட்டை நீங்கள் படிக்கும் போது நான் எங்காவது ஓர் அனாதை ஆசிரமத்தில் சேவையில் தானாகப் பணிபுரிந்து எனது அன்னியமில்லாத நெஞ்சங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பேன்....

— தாரிணி.

Colour Transparency: A. V. Bhaskar

GOKULAM

A children's monthly in English

In the August issue :

- Soar into the Milky way with our young reporters
- Meet the Hero of the Golden Bird (a fairy-tale)
- Read about Kapil the monkey who saved a whole forest.
- Meet the Adjectives in Grammarland with Amar and Ichiko
- Learn about the childhood days of Rajaji.

Annual Subscription : Rs. 36/- (India)
Overseas : Rs. 270/- (Airmail)
Rs. 120/- (Seamail)

For agency and subscription contact Gokulam, Guindy, Madras-600 032. Telephone No: 434157, 434190.

துப்பறிவும்

சூர்யா – கிரண்

தமிழ் பிரதாப் முல்லித்

போன வாரத்தான் கமிஷனர் தொழி கம்பளின் மனி வைரம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

முடை முடிந்து ஒன்று விடாமல் தேடிக்கள்!

ஆச்சர்யம்! கடத்தல் பொருள் ஒன்று கூடக் கிடைக்கலே!

கம்பளம் எங்கே? வைரமுடிகள்!

அடேய்! ஜேம்ஸ் பாண்ட் சார்! நீங்க ஒரு மிக்கப் பாவம் ஐயா!

பொருத்தம் சார் அவசரம்!

© INDIAN FEATURES SYNDICATE BOMBAY-400 052

போலீஸ்

95 கம்பளத்தும் மச்சத்தில் கடலில் தள்ளி விட்டேன்.

மெட்ராஸ் கடலில் எறிந்து விட்டேன்!

2

(தொடரும்)

இலவசம்!

பக்தி புத்தகங்கள்

இலவச பக்திப் புத்தகங்கள்
எங்களிடம் ஒரே தடவை-
யில் ரூ. 100-க்கு மேற்ப்
பட்ட ஸ்வீட்,காரம் வாங்கு
பவர்களுக்கு வாங்கும்
தொகையை அனுசரித்து
பக்திப் புத்தகங்கள்
இலவசமாக வழங்கப்படும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

பாண்டியின்

அத்தியாயம் 30

இரு சிறைகள்

வாளிலை விட்டுப் பிரித்ததும் அரிஞ்சயன் குமரி நேரே பழையாறைச் சிறைச்சாலைக்குச் சென்றான். காவலர்களை வெளியிலேயே நிறுத்தி விட்டுத்தான் மட்டும் வந்தியத்தேவன் அடைபட்டிருந்த இடத்துக்குப் போனான். அவன் தனி அறையில்பூட்டப்பட்டிருந்தான். சிறையின் உச்சி மோட்டைப் பார்த்துக் கொண்டு உற்சாகமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தான்.

"வானக்கடல்கள் எல்லாம்
மானே உந்தனைக்கண்டு
மேனி சிலிர்க்குதடி —
மெய்மறந்து நிற்குதடி!"

குந்தவை அருகில் வந்து நின்று தொண்டையைக்கனைத்தபிறகுதான் அவனைத் திரும்பிப் பார்த்தான். உடனே, எழுந்து நின்று, "வருக! வருக! இளவரசியே! வருக! ஆசனத்தில் அமருக!" என்றுஉபசரித்தான்.

"எந்த ஆசனத்தில் அமரட்டும்?" என்று இளவரசி கேட்டாள்.

"இது தங்கள் அரண்மனை. இங்கு நடப்பது தங்கள் ஆட்சி; தங்கள் ஆணை. இங்குள்ள சிம்மாசனம் எதில் வேண்டுமானாலும் தங்கள் விருப்பம் போல் அமரலாம்!" என்றான் வல்லவரையன்.

"ஐயா! உமது முன்னோர்கள் ஆணை செலுத்தி முடிவுரையும் ஆண்டபோது வல்லத்து அரண்மனை இவ்விதத்தான் இருந்து போதும். எங்கள் தகரில்இந்த இடத்தைச் சிறைச்சாலையென்று சொல்லுவார்கள்" என்றாள் இளவரசி.

"அம்மணி! எங்கள் ஊரில் இப்போது அரண்மனையும் இல்லை; சிறைச்சாலையும் இல்லை. பல தேசத்து அரசர்களுமாகச் சேர்ந்து அரண்மனை, சிறைச்சாலை எல்லாவற்றையும் இடித்துத் தரை மட்டமாக்கி விட்டார்கள். நாடு வருவோர்களுக்கு முன்பு!....."

"ஏன்? ஏன்? வல்லத்து அரண்மனை மீதும் சிறையின் பேரிலும் அவர்களுக்கு என்ன அவ்வளவு கோபம்?"

"எல்லாம் ஒரு கவிஞரால் வந்த வினை!"

"ஆ! அது எப்படி?"

"சென்ற முன்னோர்கள் தென்னாட்டின் பேரரசர்களாக அரசபுரிந்தநாளில்,காவாகாலத்தில்கப்பம் செலுத்தாத அரசர்களை அதிகாரிகள் சிறைப்பிடித்துக் கொண்டு வருவார்கள்.அரண்மனைமுற்றத்தின்இருபுறத்திலும் அந்த அரசர்களை அடைத்து வைக்கும் சிறைகள் இருந்

சல்வன்

தன. சக்கரவர்த்தி கருணை புரிந்து எப்போது தங்களை வரும்படி சொல்லி அனுப்புவார், மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஊருக்குத் திரும்பலாம் என்று அச்சிற்றரசர்கள் காத்திருப்பார்கள். பேரரசரைக் காணும் பேறு அவர்களுக்கு எளிதிலே கிட்டாது. அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கவிஞர்களும்புலவர்களும் சக்கரவர்த்தியின் ஆஸ்தான மண்டபத்துக்குப் போவார்கள். சக்கரவர்த்தி முன்னிலையில் பாடல்களைச் சொல்லிப் பரிசுகள் பெற்றுக் கொண்டு திரும்பிச் செல்லுவார்கள். அப்போது வெளியில் காத்திருக்கும் சிற்றரசர்கள், 'அடடா! இந்தப் புலவர்களுக்கு வந்த யோகத்தைப் பார்! இவர்கள் கொண்டு போகும் பரிசுகளைப் பார்!' என்று சொல்லி விசாரிப்பார்கள். 'ஓகோ! இந்தப் புலவன் கொண்டு போவது என் வெண் கொற்றக் குடையல்லவா!' என்பான் ஓர் அரசன். 'அடடா! இந்தக் கவிஞன் என் சிங்கையில் அமர்ந்து போகிறானே!' என்பான் இன்னொரு வேந்தன். 'ஐயோ! என் பட்டத்து யானையை இவன் கொண்டு போகிறானே!' என்பான் இன்னொரு மன்னன். 'இது என் குதிரை! இந்தக் கவிராயனை என் குதிரை கட்டாயம் ஒரு நாள் இழுத்து விடும்!' என்று சொல்லி மகிழ்வான் வேறொரு சிற்றரசன். எல்லாப் புலவர்களுக்கும் கடைசியில் இன்னொரு புலவர் வந்தார். அவர் வெளியிலிருந்த சிற்றரசர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டார். கேட்டுக் கொண்டே சக்கரவர்த்தியின் சந்திதானத்துக்குச் சென்று இந்தப் பாடலைச் சொன்னார்.

'என் கவிகை என் சிவிகை
என் கலசம் என் துலசம்
என்கரியு என்பரியு
என்பரசும் — பின்கலசம்
மாவேந்தன் வானவன்
வரிசைப் பரிசு பெற்ற
பாவேந்தரை வேந்தர்
பார்த்து!'

இவ்விதம் அந்தப் புலவர் பாடிய பாடல் தமிழ்நாடெங்கும் அப்போதே பரவி விட்டது. மக்கள் அடிக்கடி பாடியும் கேட்டும் மகிழ்ந்தார்கள். இதனால் எங்கள் இராஜ்யத்துக்கே ஆபத்து வந்துவிட்டது. எல்லா அரசர்களுமாகச் சேர்ந்து வந்து படையெடுத்து எங்கள் ஊரையும், அரண்மனையையும், நெற்சாலைகளையும் எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள்...''

''எல்லாவற்றையும் அழித்தாலும் அந்தக் கவியின் பாடலை அழிக்க முடியவில்லையல்லவா? உங்கள் குலம் பாக்கியம் செய்த குலத்தான்! அதன் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்!''

''வானர் குலத்தின் வீரப் புகழைக் கெடுக்க நான் ஒருவன் இப்போது ஏற்பட்டிருக்கிறேன்...''

''ஆகா! அந்த உண்மையை நீரே ஒப்புக் கொள்கிறீர் அன்றோ?''

''ஒப்புக்கொள்ளாமல்வேறுஎன்ன செய்வது? அடிமைத் தனங்களுக்குள்ளே பெண்ணடிமை மிகப் பொல்லாதது. ஒரு பெண்மணியின் வார்த்தையைக் கேட்கப் போய், என் முன்

சோர்களின் குலப் புகழுக்கு நான் மாசு தேடிக் கொள்ள நேர்ந்தது. ஓடி ஒளிந்து மறைந்து நிரந்து உயிர் வாழ நேர்ந்தது. என் கோபத்தையெல்லாம் அந்த வைத்தியர் மகளைக் கொன்று தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். அதற்கும் ஒரு தடை வந்து குறுக்கிட்டு விட்டது...''

''ஐயா! வைத்தியர் மகள் பினாகபாணி மீது உமக்கு ஏன் அவ்வளவு கோபம்?''

''கோபத்துக்கு வேண்டிய காரணம் இருக்கிறது. நல்ல ஆளைப் பிடித்து என்னோடு கோடிக்கரைக்கு அனுப்பி னீர்கள். அவன் என் காரியத்தையே கெடுத்துவிட இருந்தான். அதுபோதென்றால், சற்று முன் இந்த வீதியில் அவன் என்னைப் பல்லவர் களின் ஒற்றன் என்று சொல்லிப் பழி வேட்டரையர்களிடம் பிடித்துக் கொடுக்கப் பார்த்தான். அங்கிருந்து தப்பி வந்தால், அரண்மனை முற்றத் தில் ஆயிரம் பதினாயிரம் பேருக்கு எதிரில் என்னைப் 'பழுவூர் ராணி யின் ஒற்றன்' என்று அவன் குற்றம் சாட்டினான்.....''

''வல்லத்து இளவரசரே! அது உண்மையல்லவா?

''எது உண்மை அல்லவா?''

''நீர் பழுவூர் ராணி நந்தினி தேவி யின் ஒற்றன் என்று பினாகபாணி குற்றம் சாட்டியதைக் கேட்டேன். உண்மையைச் சொல்வீரா?''

''நான் உண்மை சொல்லுவதில்லை யென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறேன், தேவி!''

''ஆகா! அது என்ன விரதம்? அரிச்சந்திரனுக் கரையில் பழுவூர் ராணி யைப் பார்த்ததிலிருந்து அப்படிப்பட்ட விரதம் எடுத்துக் கொண்டீரோ?''

''இல்லை, இல்லை! அதற்கு முன்னாலேயே அந்த முடிவுக்கு வந்து விட்டேன். நான் உண்மைக்கு மாறானதைச் சொல்லிக் கொண்டிருந்த வரையில் எல்லாரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஒரிடத்தில்மாத்திரம் 'இளவரசர் நாகைப்பட்டினத்தில் பத்திரமாயிருக்கிறார்' என்று சொன்னேன். ஒருவரும் நம்பவில்லை. கேட்டவர்கள் எல்லாரும் சிரித்தார்கள்...''

''எல்லாவற்றையும் தலைகீழாக காரியத்தைச் செய்தீர்? உம்முடைய வார்த்தை

வை அவர்கள் நம்பாததே நல்லதாய்ப் போயிற்று; நம்பியிருந்தால் எவ்வளவு பிசகாகப் போயிருக்கும்?''

''இனிமேல் எப்போதும் இத்தகைய தவறுகள் நேரவே நேராது.....''

''உமது வாக்குறுதிக்கு மிக்க நன்றி.''

''என்ன வாக்குறுதி கொடுத்தேன்?''

''இனிமேல் தவறு எதுவும் நேராமல் நான் இட்ட காரியத்தைச் செய்வதாக...''

''கடவுளே! அப்படி நான் ஒன்றும் வாக்குறுதி கொடுக்கவில்லை. போதும்! போதும்! என்னை இந்தச் சிறையிலிருந்து விடுதலை செய்து விடுங்கள்! என் வழியே போகிறேன்.....''

''அப்படியானால், உமக்கு விடுதலை கிடையாது. இந்தச் சிறையிலேயே நீர் இருந்து வர வேண்டியது தான்'' என்றாள்.

வந்தியத்தேவன் கலகலவென்று சிரித்தான்.

''நீர் எதற்காகச் சிரிக்கிறீர்? நான் சொல்லுவது வேடிக்கை என்றா?''

''இல்லை, தேவி! இந்தச் சிறையிலிருந்து தாங்கள் என்னை விடுதலை செய்யாவிட்டால், நான் இதிலிருந்து தப்பிச் செல்ல முடியாதா?''

ளவரதி ஒரு கணம் வந்தியத்தேவனைத் தன் மலர்ந்த கண்களினால் உற்றுப் பார்த்துவிட்டு, ''ஐயா! நீர் கெட்டிக்காரர். அதிலும் சிறையிலிருந்து தப்பிச் செல்வதில் மிகக் கெட்டிக்காரர். பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து தப்பிச் சென்றதற்கு இது ஒரு பிரமாதமா?'' என்றாள்.

''அப்படியானால், நீங்களே கதவைத் திறந்து என்னை விடுதலை செய்யுங்கள்.''

''நாலே இந்தச் சிறையைத் திறந்து விடலாம், அல்லது நீரும் தப்பிச் செல்லலாம். ஆனால் இன்னொரு சிறைச்சாலையிலிருந்து நீர் தப்ப முடியாது.....''

''என்னப் பழுவேட்டரையரின் பாதாளச் சிறையைச் சொல்கிறீர்களா?''

''இல்லை; அதுவும் உமக்கு இலட்சியமில்லை. பாதாளச் சிறை வாசலில் காத்திருக்கும் புலிகளையும் வென்று விட்டுத் தப்பிச் சென்று விடுவீர்....''

''பின்னே, எந்தச் சிறையைச் சொல்லுகிறீர்கள்?''

''என்னுடைய இதயமாகிற சிறைச்சாலையைத்தான் சொல்கிறேன்.

''தேவி! நான் விடு வாசல் அற்ற அனாதை. என்னுடைய குலப் பெருமையெல்லாம் பழைய கதை;

கவிஞர் கற்பனை. தாங்களோ, மூன்று உலகையும் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தினின் செல்வக் குமாரி....''

''யார் கண்டது? இத்தச் சோழ குலத்தின் பெருமையும் ஒருநாள் பழைய கதை ஆகலாம்.''

''ஆயினும், இன்றைக்குத் தாங்கள் இந்த நாட்டில் இணையற்ற அதிகாரம் படைத்தவர். சக்கரவர்த்தியும் பழுவேட்டரையர்களும் முதன் மந்திரியும் தங்கள் விருப்பத்துக்கு மாறாக நடக்கத் துணிய மாட்டார்கள்....''

''இதெல்லாம் உண்மையாயிருந்தால், நீர் மட்டும் எவ்விதம் என் அதிகாரத்தை மீற முடியும்?''

''அரசாங்க அதிகாரம் வேறு விஷயம். தாங்கள் நெஞ்சின் அதிகாரத்தையல்லவா குறிப்பிட்டீர்கள்?''

''அதிலேதான் என்ன தவறு?''

''தம் இருவருக்கும் அந்தஸ்திலே உள்ள வித்தியாசம்தான் தவறு....''

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்ற முதுமொழியைக் கேட்டதில்லையா?''

''அந்த முதுமொழி பொன்னியின் செல்வருக்கும் படகுக்காரி பூங்குழலிக்கும் கூடப் பொருந்துமல்லவோ?''

''ஆம்; பொருந்தும்தான்! என் நம்பி உலகமாளப் பிறந்தவன் என்று நினைத்தேன். அதனால் அவர்களுடைய நெஞ்சுக்கும் நானிட விரும்பினேன்.....

''நானும் இளவரசரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டுவிட்டுத்தான் ஆவலுடன் வந்தேன். அவரோடு எட்டுத் திசைகளுக்கும் சென்று போர்க்களங்களில் வீரச் செயல்கள் புரிந்து பெயரும் புகழும் அடைய விரும்பினேன்.....''

''இப்போது அந்த ஆசை போய் விட்டதல்லவா?''

''ஆம்; பொன்னியின் செல்வர் அரசியலையைக் காட்டிலும் அமைதியான வாழ்க்கையை அதிகம் விரும்புகிறார். போர்க்களத்தில் வீர வாளேந்தி வீசுவதைக் காட்டிலும் ஆலயத் திருப்பணியில் கல்லுளி கொண்டு வேலை செய்வதற்கு அதிகம் ஆசைப்படுகிறார்.....''

''மதுராந்தகனோ இராஜ்யம் ஆளுவதில் தீவிர நோக்கம் கொண்டிருக்கிறான். ஆடு புலி ஆக மாறுகிறது; புலி ஆடாகிறது. ஆலவாய் இறைவன் நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கியதாகச் சொல்லுகிறது. அதுபோல்....''

''தேவி! தங்களுடைய கருணையினால் நானும் ஒரு நரியானேன். ஒளித்தும் மறைத்தும் தந்திர மந்திரம் செய்தும் இல்லாதது பொல்லாததைச் சொல்லியும் பகைவர்களிடமிருந்து தப்பி வர வேண்டியதாயிற்று. அரசனுக்குமரி! இந்த வேலை இனிச் செய்ய என்னால் முடியாது! விடை கொடுங்கள்....''

''ஐயா! என் பிராணன் நீதேறி என்று என்னிலிருந்த வானதி என்னைக் கைவிட்டுப் போகப் பார்க்கிறாள். நீயும் என்னைக் கைவிட்டுப் போய்விட என்னுகிறீர்?''

''தேவி! கொடும்பாளூர் இளவரசிக்கும் தங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றி நான் அறியேன். ஆனால் நான் எப்படித் தங்களைக் கைவிட முடியும்? இராஜாதி இராஜர்கள் தங்களுடைய மணிப் பொற் கரத்தைக் கைப்பற்றத் தவம் கிடக்கிறார்கள், நானோ குற்றவேல் செய்ய வந்தவன்....''

வானவிராட்டி அப்போது தன்னுடைய இருக்கரத்தை நீட்டினாள். இடது வலது, நடுவான என்ற தலைக்குத் துடன் வந்தியத்தேவன் அந்த மலர்க் கரத்தைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவனுடைய உள்ளமும் உடம்பும் பரவசமடைந்தன.

''வானர் குலத்து வீரரே! கற்பென்னும் இணையற்ற குணமாகப் பெற்ற பழந்தமிழ் மன்னர் வம்சத்தில் வந்தவள் நான். எங்கள் குலத்து மாதரில் சிலர் கணவனுடன் உடன் கட்டை ஏறியதுண்டு. பதியின் உடலை எரித்த நெய்க் குளிர்ந்த நிலவென்று அவர்கள் கருதி அக்கினியில் குதித்தார்கள்!''

''கேள்விப்பட்டிருக்கிறேன்;

"தேவி!"

"உமது சுரத்தைப் பற்றிய இந்த என் கரம் இன்னொரு ஆடவனுடைய கையை ஒரு நாளும் பற்றாது..."

வல்லவரையன் சொல்லி முடித்து செவிமடுத்து குந்தவையின் கண்ணீர் தும்பிய கண்களைப் பார்த்த வண்ணம் மலைத்து நின்றான்.

"ஐயா! உம்முடைய பதற்றமான காரியங்களினால் உமது உயிருக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் என்னுடைய கதி என்ன ஆகும் என்பதைச் சிறிது எண்ணிப் பாரும்."

"தேவி! தங்களுடைய இதய சிம்காதனத்தில் இடம் பெற்ற இந்தப் பாக்கியசாலி உயிருக்குப் பயந்த கோழையாயிருக்க முடியுமா?"

"கோழைத்தனம் வேறு, ஜாக்கிரதை வேறு, ஐயா! முதன் மந்திரி அநிருத்தருக்குக் கூடத் தங்கள் விரத்தைப் பற்றி இலம் கிடையாது."

"பின்னர், எதைப் பற்றி அவர் இலப்படுகிறார்...."

"நீர் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருக்கலாம் என்று இலறுகிறார்...."

"அப்படியானால், வைத்தியர் மகன் பினாகபாணிக்கு அளித்த மறுமொழியை அவருக்கும் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். மறைக்கதவைத் திறவுங்கள்: அந்த மனிதர் எங்கே இருக்கிறார் என்று சொல்லுங்கள்."

"வைத்தியர் மகனைவிட மற்போரில் சிறிது பழக்கமுள்ளவன்: அநிருத்தர் சொற்போர் அறிவாரேயன்றி மற்போர் அறியார். அறிவின் கூர்மையே அவருடைய ஆயுதம்: வாளின் கூர்மையை அவர் என்றும் நாடிக் கொண்டதில்லை...."

"அப்படியானால், என்னுடைய வாளின் கூர்மையைத்தான் முதன் முதலில் பரீட்சை பார்க்கட்டுமே?"

"ஐயா! இந்த நாட்டில் சக்கரவர்த்திக்கு அடுத்த மரியாதைக்குரியவர் முதன் மந்திரி அநிருத்தர். அவருடன் பகிரங்கமாக முரண்படப் பழுவேட்டரையர்களும் தயங்குகிறார்கள்...."

"பழுவேட்டரையர்கள் குற்றம் உள்ள நெஞ்சினர். அவர்கள் பயப்படுவார்கள். நான் ஏன் பயப்பட வேண்டும்?"

"இளம் பிராயத்திலிருந்து என் தந்தையின் உற்ற தோழர் அவர். முதன் மந்திரிக்குச் செய்த அவமரியாதை சக்கரவர்த்திக்கும் எனக்கும் செய்த அவமரியாதையாகும்."

"அப்படியானால், அவருடைய நம்பிக்கையை நான் பெறுவதற்கு வழியையேனும் சொல்லுங்கள்."

"முதன் மந்திரி காஞ்சிக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவரை அனுப்ப விரும்புகிறார். உம்மை அனுப்பலாம், நம்பி அனுப்பலாம் என்று நான் அவருக்கு உறுதி அளித்திருக்கிறேன்."

"தேவி! காஞ்சிக்கு என்னை அனுப்பாதீர்கள்! என் மனத்திற்குள் ஏதோ ஒரு குரல் 'காஞ்சிக்குப் போகாதே!' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது."

"அது ஒருவேளை பழுவூர் இளைய ராணியின் குரலாயிருக்கலாம் அல்லவா?"

"இல்லவே இல்லை! தங்களுடைய சொல்லுக்கு மாறாக அந்த விஷ நாகத்தின் குரலை நான் கேட்பேனா?"

"ஐயா! பழுவூர் இளைய ராணியைப் பற்றி இனி எந்த சமயத்திலும் அப்படியெல்லாம் பேசாதீர்கள்!"

"இது என்ன? ஏன் இந்த நிலை மாறுதல்!"

"ஆம்: என் மனம் அவள் விஷயத்தில் அடியோடு மாறி விட்டது. நீர் இலங்கையிலிருந்து கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு."

"அப்படியானால் இனி நான் பழுவூர் இளைய ராணியிடமும் பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டியதுதானோ!"

"ஆம்!"

"அவள் பக்தியுடன் பூஜை செய்யும் கொலை வாளை என்னிடம் கொடுத்து 'இன்னாருடைய தலையைக் கொண்டு வா!' என்று சொன்னாலும் கொண்டு வர வேண்டியதுதானோ?"

த்தலை தேவியின் உடம்பு நடுங்கிற்று. மறுமொழி கூறிய போது அவளுடைய குரலும் நடுங்கிற்று.

''பழுவூர் ராணியிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டியது நான். ஆனால் அவள் பேச்சைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவள் எத்தனைய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவளுக்கே தெரியாமலிருக்கலாம் அல்லவா?''

''அப்படித்தான் அவளும் கூறினாள். 'நான் எதற்காக இந்தக் கத்தியைப் பூஜை செய்து கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை' என்றாள்.''

இதைக் கேட்ட இளவரசி இன்னும் அதிகமாக நடுங்கிய குரலில், ''இந்தச் சோழர் தொல்குடியைத் தெய்வம்தான் காப்பாற்ற வேண்டும்'' என்றாள்.

''காப்பாற்றுகிற தெய்வம் இந்த ஏழையைச் சாதனமாக வைத்துக் கொண்டு காப்பாற்றட்டும்'' என்றான் வந்தியத்தேவன்.

''ஐயா! நானும் அப்படித்தான் நம்பியிருக்கிறேன். நீர் உறங்கி விழித்து திரும்பி வந்ததும் மறுபடி ஒரு நடையை இலங்கைக்குப் போக வேண்டும். அந்த ஸ்ரீமந்த ராஜாவை எப்படியாவது இங்கே அழைத்து வர வேண்டும்.....''

''அவனை அழைத்து வருவது சுழிக் காற்றைக் குடத்தில் அடைத்துக் கொண்டு வருவது போலத்தான். இப்படி ஒரு முறை யாரோ சொன்னார்கள். ஆம், அந்த வீர வைஷ்ணவன் தான். ஒரு வேளை அவனே அழைத்து வந்திருக்கலாம்.''

''இல்லை; அவனால் அந்தக் காரியம் முடியவில்லை. உம்மாலேதான் அந்தக் காரியம் ஆக வேண்டும்.''

''அப்படியானால் என்னைக் காஞ்சிக்கு அனுப்பாதீர்கள், தேவி!''

''ஏன்?''

''அங்கே என் எஜமானர் இருக்கிறார். அவர் கேட்டால் நான் எல்லா விவரங்களையும் சொல்லித்தான் ஆக வேண்டும். பழுவேட்டரையர்களும் மற்ற சிற்றரசர்களும் செய்யும் சதியைப் பற்றி அறிந்தால் உடனே வெகுண்டு எழுவார். சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தால் உடனே படை எடுத்துக் கிளம்புவார். பொன்னியின் செல்வரைப் பற்றிய செய்தி அவர் காதில் எட்டி விழுந்தால் இதற்குள்ளேயே ஒரு வேளை புறப்பட்டிருந்தாலும் புறப்பட்டிருப்பார்...''

''அதற்காகவேதான் உம்மை அனுப்ப விரும்புகிறேன். அவர் காஞ்சியை விட்டுப் புறப்படாமல் எப்படியாவது தடுத்து விட வேண்டும்.''

''நான் காஞ்சியை அடைவதற்குள் அவர் புறப்பட்டிருந்தால்?.....''

''வழியில் அவர் எங்கே இருந்தாலும் அங்கே போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாக நீர் அவசியம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது.....''

''சொல்லுங்கள்!''

''பெரிய பழுவேட்டரையர் இளைய ராணியுடன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.....''

''உண்மையில் இளைய ராணி தான் போகிறாளா? அல்லது இளைய ராணியின் பல்லக்கில்....''

''இல்லை; இளைய ராணிதான் போகிறாள். என் சித்தப்பாதான் இன்னும் இங்கே இருக்கிறாரே?''

''எதற்காகப் போகிறார்களாம்?''

''ஆதித்த கரிகாலனையும் கடம்பூருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். கலியாணப் பேச்சு என்பது வெளிப்படையான காரணம். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக் கொடுத்துச் சமாதானம் செய்து வைக்கப் போவதாகவும் ஒரு பேச்சு நடந்து வருகிறது.''

''என் எஜமானர் அதற்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார்.''

''அதைப் பற்றியெல்லாம் இப்போது எனக்குக் கவலை இல்லை.''

''பின்னே, என்ன கவலை தேவி?''

''இன்னதென்று சொல்ல முடியாத பயம் என் மனத்தில் குடிகொண்

தரபத்தோடு முயற்சியைத் தொடர்ந்து கொண்டே போனால், என்றைக்கோ ஒருநாள் அவன் எதிர்பார்ப்பு

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

டிருக்கிறது. நெஞ்சு திக், திக் என்று அடித்துக் கொள்கிறது. அரைத் தூக்கத்தில் விவரமில்லாத பலர் கரங்கள் என்னைச் சூழ்ந்து கொள்கின்றன. தல நூக்கத்தில் அகோரமான கனவுகள் கண்டு விழித்துக் கொள்கிறேன். அப்புறம் வெகுநேரம் வரையில் என் உடம்பு நடுங்கிக் கொண்டிருக்கிறது."

"இந்த நிலையில் தங்களைப் பிரிந்து என்னை ஏன் போகச் சொல்லுகிறீர்கள்? தங்களுக்கு எத்தனைய அபாயம் வந்தாலும் என் உயிரைக் கொடுத்து....."

"ஐயா! என்னுடைய பயம் என்னைப் பற்றியதே அன்று. என் தமையனைப் பற்றியது; பழுவூர் இராணியைப் பற்றியது. அவர்கள் சந்தித்தால் என்ன நேரிடுமோ என்று எண்ணி என் உள்ளம் கலங்குகிறது. அவர்கள் தனியாகச் சந்திக்க முடியாதபடி நீர் தடை செய்ய வேண்டும்....."

"தேவி! அவர் ஒன்று செய்வதற்கு நினைத்தால் அதை யார் தடுக்க முடியும்?"

"ஐயா! என் தமையனைக் காப்பாற்றும் இரும்புக் கவசம் போல் நீர் உதவ வேண்டும். அவசியமானால் நந்தினியார் என்பதை என் சகோதரரிடம் சொல்லி விட வேண்டும்..."

"அதை அவர் நம்ப வேண்டுமே?"

"நம்பும்படியாகச் செய்வது உமது பொறுப்பு. எப்படிச் செய்வீர் என்று எனக்குத் தெரியாது. அவர்களை எப்படியேனும் சந்திக்க முடியாதபடி செய்தால் மிக்க நலமாயிருக்கும்."

"தேவி! என்னாலியன்ற முயற்சிகளைச் செய்துபார்க்கிறேன். தோல்வி அடைந்தால் என்னைக் குற்றம் சொல்ல வேண்டாம்" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! நாங்கள் தோல்வி அடைந்தாலும் வெற்றி அடைந்தாலும் என் இதயச் சிறையிலிருந்து இந்த ஜன்மத்தில் தங்களுக்கு விடுதலை கிடையாது!" என்றாள் அருள்மொழி.

(தொடரும்)

சுற்றிப் பார்த்தோம் சொல்கிறோம்...

•• தெரிசனை, பரிசுத்தம் இவ்வளவு தூரம் ரம்மியமான சூழ்நிலையில் மொழுகைக் கழிக்க ஏற்ற ஓர் இடம் என்று கோட்டாறு விட்டால், அபிராமமான வித்தியாசத்தில் வெற்றி பெறுவது 'பொட்டாணிக்கள் கார்டன்' தான். இதில் அதிக பராமரிப்பில் உள்ள இந்தப் பிரம்மாண்டமான பூங்காவில் சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமான செடி, கொடி, மர வகைகள் உள்ளனவாம். இரண்டு சதம் போட்டு விட்ட இந்தப் பூங்கா இந்தியாவிலேயே மிகப் பெரியதும், பராமரிப்பானதுமாம். இங்கே பூங்கா மரங்களில் தூப்பி விடாத அந்தஸ்து பெற்றது ஓர் ஆலமரம். ஆனால் ஏறத்தாழ 400 மீட்டர் சுற்று வேலி போடப்பட்டுள்ள இந்த ஆலமரத்தின் நுனி வேர் அழிந்து போய் விட்டதே என்பதும் கூட, விழுதுகளின் காரணமாய் அமர்க்களமாய் இருக்கிறது. விழுதுகளின் எண்ணிக்கை? 'ம்... நூர்ச்சை போட்டு விழுதீர்கள்!' 'ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தைந்து!' இதைப் பூங்காவில் உள்ள இன்னொரு முக்கியமான 'Mad மரம்!' ஆம்! பைத்தியக்கார மரம்தான். ஒன்? "இதில் ஓர் இலை போல இன்னொரு இலை இருக்கவே இருக்காது. இந்த மரம் இந்திய நாடு போல!" என்றார் கைடு. 'இந்தியர்களை எல்லாம் பைத்தியக்காரர்கள் என்கிறீர்களா?' என்று ஆட்சேபித்தார் ஒருவர். "இல்லை! இல்லை! மதத்தால், மொழியால் நாம் எல்லாரும் வேறுபட்டாலும், தேசப் பற்றினால் ஒன்றுபடுகிறோமல்லவா? அது போலத்தான் இந்த மரத்திலும் என்று விளக்கினார் அந்த கைடு.

•• கன்னத்தாலில் காளி கோவில்களுக்குப் பஞ்சமே இல்லை என்றாலும், மிக முக்கிய மானவை என்று கருதப்படுபவை இரண்டு: அவை தட்டுவேலன்விளை காளி கோவிலும், 'காளி காட்டும் உள்ள கோவிலும்தான். தாமிரவருணி நதிக் கரையில் அமைந்துள்ளது தட்டுவேலன்விளை காளி கோவில். ராணி ராஜ மோகினியால் கட்டப்பட்ட இந்தக் கோவிலில் தான் பலவான ராமதிருஷ்ண பரமஹம்சர் தங்கியிருந்து, காளிக்கு பூஜை செய்தார். இந்தக் கோவிலில் இப்போது ஆடி, மாசி கள் பலியிடப்படுவது தடை செய்யப்பட்டு விட்டாலும் இன்றும் 'காளிகாட்' ஆடுகள்

கோவிலில் தடை செய்யப்படவில்லை. நாள் தோறும் அங்கே பலி நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பது சுற்றத்திற்குரிய விஷயம்.

•• கலில் எல்லா பாகங்களிலுமிருக்கும் ராமதிருஷ்ண மடங்கள் மற்றும் பிரஞ்சுகளின் தலைமையகம் கன்னத்தாலிலுள்ள இருக்கிறது. கலாமி விவேகானந்தரால் துவங்கப்பட்ட இது நாடெங்கும் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டிருப்பதே ஓர் அதிசயம். இங்குள்ள மடத்தை மாடியிலிருந்து பார்த்தால் சர்ச் போலவும், இன்னொரு திசையிலிருந்து பார்த்தால் மசூதி போலவும், வேறொரு இடத்திலிருந்து பார்த்தால் இந்துக் கோவில் போலவும் தெரியும்படி அமைத்திருப்பதே இம் மடத்தின் பரந்து பட்ட பார்வைக்குச் சான்று. நாற்புறங்களிலும் தினமும் பக்தர்களும் நிறைந்து வரும் பார்க்க வேண்டியதும் வழிபட வேண்டியதுமான இருந்தும் சுற்றி வருவது அப்படியொரு சுற்றம். அதைச் சுற்றுலாவே அங்கு அனைவரும் தவறவிட்டு விடலாகாது செய்யலாம்.

•• பார்வை பாணியில் கட்டப்பட்டுள்ள மணல் கோவிலின் அழகே தனி. கோவிலுக்கு முன்பக்கமுள்ள தோட்டமும், தோட்டத்திலுள்ள குளத்தில் தண்ணீருக்கு மேலே மிதப்பது போல் தள்ளித் தள்ளி வினை யாடும் மீன்களும் பார்க்கப் பார்க்கச் சலிக்

காதலை. கொடுக்கும்போ இரு பக்கம் கண்ணும் கண்ணாடியை வைக்கப்பட்டதுபோல் உள்ளன. அதன் வழியே செல்லும் போது நாமு உருவத்தின் பிம்பங்கள் ஏராளமாகத் தெரியும். அப்படி எத்தனை பிம்பம் என் தெரிகின்றனவோ அத்தனை பிறவிகள் இன்னும் நமக்கு உண்டு என்று பலரும் நம்புகிறார்கள்!

** கம்போடியா என்றதும் உலகம் முழுவதும் நினைவுக்கு வரும் ஒருவர் அன்னை தெரசா. இவரது 'மிஷனரீஸ் ஆப் சாரிடீஸ்' அமைப்பின் தலைமையகம் கல்கத்தாவில் தான் இருக்கிறது. இந்த அமைப்பின் மூலம் இயங்கும் பெரும் எண்ணிக்கை அனாதைக் குழந்தைகள் இல்லம், தொழுநோயா

னர் இல்லம், முதியோர் இல்லம், சமூகப் பொறுப்புகளுக்கு நிலமளித்தும் 'தொழில் பயிற்சி மையம்' போன்ற எதையுமே விரும்பப்பட்ட மாநில செல்வ பார்வையிடாமல், மனநிலை என்ற மாநகரத்தில் பேப்பு தரும் வழக்கமெல்லாம் கிடையாது. 'நீங்களாகவே வந்து பாருங்கள்; பார்த்ததை எழுதுங்கள், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை, எங்களுக்குத் தொண்டூழியம் முக்கியம், விளம்பரம் இல்லை' என்று சொல்லி விடுகிறார்கள்!

•• இந்தியாவிலேயே மிகப் பெரிய மியூசியம் என்ற பெருமை உடையது கல்கத்தாவின் 'இந்தியன் மியூசியம்'. 1875-ம் ஆண்டு கட்டப்பட்ட இதன் விலங்கியல், புவியியல், பூகோள இயல் பகுதிகள் மிகவும் சிறப்பானவை. புவியியல் பகுதியில், மலைப் பாறைகளில் செய்யப்பட்ட சிற்பவேலைகள் பற்றிய புகைப்பட ஆல்பங்களின் தொகுப்பை வைத்திருக்கிறார்கள். ரெலாஸ் பொகொஸ், பேலூர், தெளசீரு, சோமநாத்பூர், தமிழ்... என்று எல்லோன்னவோ இருக்கிறது. ஆனால் அங்கே நம் மனசில் பதியும் படத்தைக் காணோம்! அதே போலத்தான், பல்வேறு மலைஜாதியினரையும், அவர் ஆபரணங்களையும் அவர்களைக் காட்டும் வண்ணம் அந்தந்த மலை ஜாதியினரின் (மலை) வாழ்வைத் தத்ரூபமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் நம் மாறிவரும் தோட்டங்களைக் காணோம். வட்டத்தில் உள்ள கண்ணில் நம் மக்கத்து நல்ல மிடில்கள் ஏன் படுவதில்லை?

• முன்று மாடிகளில் முதல் மாடிதான்....

•• கல்கத்தா போன்ற பிரபல், நியூயார்க் காரணம் கொண்டும் மிக பள்ளைக் கூடத் ஒன்று உண்டென்றால் அது நேரு ஜூனியர்கள் மியூசியம்தான். பெயரில் குழந்தைகள் என்று இருந்தாலும் உண்மை போன்ற பெரியவர்களும் குழந்தைகளாகி விடுகிறார்கள் என்பதுதான் நிஜம். உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட பொம்மைகளின் கலெக்ஷன் இது. இந்த மிக அருமையான கலெக்ஷனுக்காக மியூசிய நிர்வாகத்தினரை எத்தனை பாராட்டினாலும் தகும். ஒரு இடத்தில் சாம்பல் நிறக் களிமண்ணில் அன்னப் பறவை போல ஒன்று இருக்கிறது. அதன் பின்னால் வொரியோனது! ஒரு டி.வி. ஆப். இந்த மியூசியத்தைத் தந்திப் பார்த்துக் கொண்டே வந்த போது, ரெ நெஹரு

• 'களிகால்' கார் கொண்டு

கல் களிமண்ணில் தம் மனம் நினைத்து உருவங்களை அமைத்துக் கொண்டிருந்தார். அந்த டி.வி.ஆப்பிலும் இவரைக் கொஞ்சும் களிமண்ணைக் கையில் எடுத்துக் கொண்டு, பொம்மை செய்ய ஆரம்பித்து விட்டார்! அன்னப் பறவை உருவத்தை செய்து முடித்த அவர் எடுத்துக் கொண்ட நேரம் இரண்டு நிமிடம். எல்லோரையும் ஆச்சரியப்படுத்திய அந்த டி.வி.ஆப்பி யார் தெரியுமா? முன்னாள் தலைமைப் நெஹரு பெரிய!

•• மிருகக் காட்சி சாலைகளில் வழக்கமாய் காணப்படும் மிருகங்களைத் தவிர்த்து மிருகக் காட்சி சாலையும். இதிலே ஒரே ஒரு ஸ்பெஷாலிடி உண்டு. மிருகக் காட்சிச் சாலைகளிலும் வேலி இல்லாத ஒரு மினி ஜூ. ஆமாம்! குழந்தைகளைக் கவரும்படியாய்க் குட்டி யானை, புலிக்குட்டி, என்று பல்வேறு குட்டி மிருகங்களைத் தனியே வைத்திருக்கிறார்கள்.

•• நம் ஊரில் கம்ப்யூட்டர் கோர்ஸ்கள் நடத்துகிறார்களே அதைப் போல, கல்கத்தாவில், சின்னக் குழந்தைகளுக்காக, 'பேரம் பேசிப் பொருட்கள்

வாங்குவது எப்படி?' என்ற வகுப்புகள் நடத்தினால் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். ஆமாம்! தெருவோரக் கடைகளில் ஏழுபத்தைந்து ரூபாய் விலை சொல்லப்பட்ட ஒரு மாலை இருபத்தைந்து ரூபாய்க்கு வாங்கியது; தாற்பத்தைந்து ரூபாய் சொல்லப்பட்ட போட்டோ ஆல்பத்தைப் பதினைந்து ரூபாய்க்கு வாங்கியது. இருபத்தி நான்கு ரூபாய் சொல்லப்பட்ட ஒரு ஜோடி செருப்பைப் பன்னிரண்டு ரூபாய்க்கு வாங்கியது – இதெல்லாம் நம் நிருபர்களுக்கு ஏற்பட்ட சில அனுபவங்கள். கல்கத்தா வியாபாரிகளிடம், கலைஞரைப்போலவே, கட்டு மீறிக்கு அடிமட்ட விலையில் ஆரம்பித்துப் பேரம் பேசுங்கள். நமது நிருபர்கள் வாங்கியதை விடவும் குறைவான விலைக்கே நீங்களும் வாங்க முடியும்!

* தட்சிணேஸ்வர் காளி கோவில்

** வெளியிலிருந்து பார்க்கும்போது அட்டகாசமான தோற்றம் அளிப்பது (அட்டையில் உள்ள கட்டடம்) விக்டோரியா மெமோரியல் ஹால் என்ற மியூசியம். தாஜ் மகாலுக்குப் பரிசுத்த கற்கள் சப்ளை செய்த அதே ராஜஸ்தானிலிருந்து பளிங்குக் கற்களைக் கொண்டு வந்து கட்டப்பட்ட வெள்ளைக் கட்டடம். 'இதில் பார்க்க வேண்டியே; மார்பிலா!' என்றார் கைடு.

* தெருவோர மக்கள்

விக்டோரியா மகாராணியின் நினைவாய் 1906-ம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு, வேலை பூர்த்தியானது 1921-ல். மகாராணி உபயோகித்த பல்வேறு உடைகளும், மற்ற பொருட்களும் இங்கே பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஆங்கில வைஸ்ராய்களின் படங்களும், சிலைகளும் மட்டுமின்றி, அவர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்திய இந்திய அரசர்கள், தேசத் தலைவர்கள் இவர்களின் படங்களும் இடம் பெற்றுள்ளன. இந்தக் கட்டடத்தின் உச்சியில் உள்ள மூன்று டன் எடையுள்ள சிலை காற்றின் திசைக்கேற்பத் திரும்பும்.

** இந்திய நாட்டின் முக்கியமான மூன்று நூல் நிலையங்களில், மிகவும் முக்கியமானது கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம். இங்குள்ள நூல்களைப் போன்ற அரிய தொகுப்பெல்லாம் வேறு எந்த இந்திய நூல் நிலையங்களிலும் இல்லை. இத்தாலிய கட்டடக் கலையின் அடிப்படையில் கட்டப்பட்ட இந்த நூல் நிலையம் முன்பு கல்கத்தாவின் ஆளுனர் மாளிகையாய் இருந்தது.

• மோதலைத் தவிர்க்க உதவ வேண்டும்...

• சமயோசித மடம்

இன்றைக்கு இங்குள்ள நூல்களின் எண்ணிக்கை பத்து மில்லியன்களுக்கும் அதிகம். இவற்றோடு மிகப் பழமையான அரிய கையெழுத்துச் சுவடிகளையும் ஏராளமாகப் பாதுகாத்து வைத்திருப்பது இதன் முக்கிய சிறப்பு!

•• கல்கத்தா நகரிலுள்ள சினைகள் பற்றி அவசியம் குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. சினைகளின் பீடத்தில், சினைத் திறப்பு விழா நாள், இன்னார் தலைமை, முன்னிலை என்கிற விவரங்கள் எழுதப்பட்டிருக்கும். சினையால் திற்பவரின் பெயர், அவரது தொற்றம், மறைவு ஆகிய வைதான் இருக்கும். விஷயம் இப்படியிருக்கக் கல்கத்தாவில் பாரதியாருக்குச் சினை வைத்த போது, எம்.ஜி.ஆர். பெயரைப் பீடத்தில் பொறிக்கத் தமிழக அரசு தலையிறால் முயன்றதாம். பலன் பூஜ்ஜியம்தான். கடைசியில் தமிழக அரசாங்கம் சினையை அன்பளிப்பாகக் கொடுத்த விவரத்தை மட்டும் பீடத்தின் ஒரு மூலையில் பொறிக்க ஒப்புக் கொண்டார்களாம். நம்மவர்களின் வினம்பரப் பித்திற்குக் கிடைத்த சரியான குட்டு!

•• கல்கத்தாவிலுள்ள தலைமைச் செயலகத்திற்கு 'ரைட்டர்ஸ் பில்டிங்' என்று பெயர். எப்படி இதற்கு ரைட்டர்ஸ் பில்டிங் என்று பெயர் வந்தது? ஆங்கிலேயே ஆட்சியின் போது, ரிசிட்டிஷ் அரசாங்கத்தின் அக்கவுண்ட்ஸ் ஆபீஸாய் இது இருந்ததாம். இங்கே உட்கார்ந்து கணக்கு எழுதுவார்களாம். அக்கவுண்ட்ஸ் ரைட்டர்கள் இருந்த காரணமாய்த்தான் இந்தப் பெயர்! எழுத்தாளர்களைச் சிறப்பிக்க அல்ல!

•• கூட வந்த நமது கல்கத்தா நண்பர் கா. கு. மணியம் அந்த வீட்டைச் சுட்டிக் காட்டிச் சொன்ன போது நம்ப முடியவில்லை. கண்ணாம்பூச்சப்பட்ட பிக் சாதாரணத் தோற்றமுடைய அந்த வீடு இரண்டு மாடிகளைக் கொண்டது. அதன் பால்கனிகளில் நடித்தாவர்க்கத்து வீடுகளுக்கே உரிய பாணியில் துவைக்கப்பட்ட சேலை துணிமணிகள் காயப் போடப்பட்டிருக்கின்றன. வாசலில் பாதுகாப்புக்காக இரண்டு மூன்று போலீஸார். இதுதான் மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசுவின் வீடு என்றால் எப்படி நம்புவது? அதுவும் முழு வீடும் இல்லை. வீட்டின் தரைத் தளத்தில் வீட்டுக்காரர் குடியிருக்கிறார். இரண்டாவது மாடியில் வேறொருவர் வாடகைக்கு இருக்கிறார். முதல் மாடியில் முதல்வர் நம்பூதிபாத் (இரண்டாவது மாடிக்காரர் தமது அறையொன்றை ஏ.சி. செய்துள்ளார். ஜோதிபாசு வீட்டில் அதுவும் இல்லை!) இதைவிட ஆச்சரியம், ஏதோவொரு வாய்ச் சண்டை காரணமாக வீட்டுக்காரர் ஜோதிபாசு நதும்பத்தின் மேல் வழக்குத் தொடுத்திருப்பதுதான்! இதெல்லாம் நம்ம ஊரில் நடக்குமா?

•• கல்கத்தாவின் போக்குவரத்து நெரிசலுக்கு உதாரணமே கிடையாது. எனவே சாலையில் போதிய வாகனங்கள் குன்றின் மேல் ஒன்று இடித்துக் கொள்வது சர்வ சகஜம். அதை டிரைவர்களோ, பயணி

• ஆலமரம்

• டெலிபோன் சாவடி

இனிப்பான செய்தி !

உங்கள் குடும்பத்தின்
சிற்றுண்டிக்கான உயர்ந்த ரக இனிப்பு, கார வகை
பட்சணங்கள் உடனடியாக கிடைப்பதற்கு
இப்பொழுது நிறுவப்பட்டிருக்கிறது.

ஸாய் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்
(AIR - CONDITIONED)

57-A, கற்பகவிநாயகம் தெரு,
அபிராமபுரம், சென்னை - 600 018
(சி.பி. ராமஸ்வாமி ரோடு, T.V. ஹோம் அருகில்)

தொலை பேசி எண் : 75243

எங்கள் தயாரிப்புகள் அனைத்தும் மிகத்தரமான பண்டங்களைக் கொண்டு சுத்தமான இடத்தில் செய்யப்படுகின்றன. வருகையாளர்களின் முழு திருப்தியே எங்கள் குறிக்கோள்.

திருமணம் போன்ற விசேஷ சமயங்களில் தேவைப்படும் சீர்முறுக்கு, அதிரசம் போன்ற சிறப்பு பட்சணங்களும் செய்து தரப்படும்.

இன்றே குடும்பத்துடன் வந்து வாங்கி உண்டு மகிழுங்கள். எங்களது அதிரசம், பாதாம் அல்வா, ரஸமலாய், ரஸகுல்லா, பால் அல்வா, குலாப் ஜாமன், பாலந்தி போன்ற இனிப்புகளையும் மற்றும் சீடை, கைமுறுக்கு, தேங்குழல், ரிப்பன் நாடா, காராசேவ், மிக்ஸ்சர் போன்ற கார வகைகளும் நீங்கள் உண்டு மகிழலாம்.

''எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே''

— தாயுமான ஸ்வாமிகள்.

நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது

மும்பத்வால்
பேப்பர்மில்ஸ்

Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.

MF 836 O TAM

அவர்: சொல்லில் பிறந்திருக்கக் கூடாதா என்று எங்கிருந்தோ... என்!

தலைவர்: சேர் பெருந்தகை முழுவதும் ஆராய்ந்து என் பிறந்தநாள் போஸ்டர் ஒன்று அச்சிடப்படுத்திருக்க வேண்டுமாறாம்!

— ப. சாமுவேல்

மிகவும் சகஜமான ஒன்று.

•• சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்புகள் கார்களில் காலையிலும், மாலையிலும் செல்லித் தான்னை ஓட்டி விட்டுப் போன்றார்கள். சில சேலை மாற்பாளை கட்டி வாசலும், செய்தித்தாள் வியாபாரிகளும், போறவர்களும், வருபவர்களும் அந்த இடங்களில் நின்று கொண்டு, பேப்பர் படித்து, நியூஸ் தெரிந்து கொள்கிறார்கள். இப்படி ஒட்டப்படுவதை பெரும்பாலும் வக்க மொழி செல்லித் தான்கள்தான்.

•• கல்கத்தாவில் பெண்களைக் கண்டபடி கேலி செய்வதும், அதனால் அப்துள்ள பெண்கள் மிகவும் சகஜமாக ஆங்கிலைப் போலவே தனியாகக் கட தேநாட்டங்களுக்குச் சென்று சாப்பிடுகிறார்கள். தெருவோர டக்கடைகளில் டீ குடிக்கிறார்கள்.

•• கடைசியாக ஒன்று – தொலைந்து வழி மாறி டாக்ஸியில் செல்ல விரும்பும் வாசகர்களுக்கு ஓர் எச்சரிக்கை. உங்கள் நகரில் முக்கியமான ரெண்டைவிலிருந்து நேரே நியூஜல்பைகுரி வரை பறவு செல்லும் பட்சத்தில், ரெண்டையை விட்டுப் புறப் படும் முன்பே தொலைபேசியிலிருந்து நியூ ஜல்பைகுரி போகும் ரயிலை கண்டிப்பாகக் கன்பர்மேஷன் சீட்டோடு ஆகிவிட்டதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நாங்கள் மொத்தமாய் டிக்கெட் வாங்கி வரவி விட்டதே, ஆட்டோவுக்காகச் சென்னையாகிலுக்காக கொட்டாவில் கன்பர்ம் எக்ஸ்பிரஸிலும் 'பர்த்' கிடைத்து விடும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டு போனால், ஏமாற்றமே மிஞ்சும். அங்கே யுள்ள ஆங்கிலம் தெரிந்தும், பெங்காலி, அல்லது இந்தியில் மட்டுமே பேசும் டிடி. ஈ.கிள் தலியும் கரமல் 'எனக்கு அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. 'நான்' குறிக்கிறார்' என்று ஆங்கிலேயே கேட் பார்கள். வேறு வழியில்லாமல் நீங்களும் கொடுக்க வேண்டியிருக்கும். இது எங்கள் சொந்த அனுபவம். (மொத்தம் நான்கு 'பர்த்'களுக்காக எண்பது ரூபாயை வீண மாக அழுதோம்!)

— எஸ். சத்தியமூர்த்தி.

கனை பேர்தான் எடுத்துக் கொள்வது வழக்கம். பல்களில் இந்த மாதிரி இடத் தில் போது ஏற்படும் 'நாக்கைக் குறைக்க. ஒவ்வொரு பஸ்ஸில் நிறுத்தும் பஸ் டயர் ஒன்றையே பொருத்தியிருக்கிறார்கள்!

•• நம் வாழ்நாள்தான் டெலிபோன்கள் நாட்களைவிடக் கோலை செல்லாமல் தெற்கு போகின்றன. நாம் என்ன செய்கிறோம்? நாலைந்து நாளை டெலிபோன் இலாகாவுக்குப் புகார் செய்து விட்டுக் காத்துக் கிடக்கிறோம். நம்மையே தொந்து கொள்கிறோம். ஆனால் அங்களில் அப்படி இல்லை. சேத்துப் போன டெலி போன் ஒன்றைப் புதிதாக ஏற்படுத் வர்களைவரும் (சில வர்களைவரும்) எடுத்துக் கொண்டு போய் டக்கென்றி வெகுவர் பகுதியில் புதுத்து ஒரு சாதியே கட்டி, மேலே டெலிபோனின் உருவத்தைப் பதித்து, நினைவுச் சின்னம் ஒன்றையே அமைத்து விட்டார்கள். இந்த அமைத்துக் கள் டெலிபோன் உபயோகிப்பவர்களின் அமைப்பு.

•• 1871 – ஆம் ஆண்டில் ஜார்ஜ் தி மினைக் கட்டச் சர் பிராட் போர்டு வெஸ்லி என்கிற நெக்ரோபிய கம்பெனியின் தலைமை இஞ்சினியர் தற்காலிகமாய் ஒரு பாலம் கட்டினார். கட்டை வண்டிகளும், மற்ற வண்டிகளும் போய் வந்ததால், நாளடையில் பாலம் பலவீனமடையவே, 1935-ல் புதிதாய் ஒரு பாலம் கட்ட வேண்டியது அவசியம் என்று உணரப்பட்டது. அப்படிக் கட்டப்பட்டதுதான் கல்கத்தாவி லுள்ள இன்றைய தொங்கும் பாலம். உலகத் திலேயே பிஸியான பாலங்களில் இதுவும் ஒன்று. பாதசாரிகளும், சைக்கிள்களும், ஆட்டோக்களும், டாக்ஸிகளும், பஸ்களும், டிராம்களும் ஒரே சமயத்தில் அணிவகுத்துப் போகும் வரவும் செய்வதைவுக்கு அத் தனை அகலமான பாலம் இது.

•• கல்கத்தா நகரின் பல பகுதிகளிலும், நகரமட்டத்திலுள்ள தாழ்வானிடத்திலிருந்து குடி தண்ணீரைத் தன்னிச் வந்து கொண்டே இருப்பது வியப்பாகவே காட்டி. ஆகவே கல்கத்தாவைத் தலைநகரிடமாகக் கொண்டு இந்தியாவை ஆண்ட போது, சாலைகளைக் கழுவுவதற்காக நகரின் நடுவிலிருந்து அமைக்கப்பட்ட தாழ்வான இடம். இன்று இந்தத் தண்ணீர், தெருக் களைச் சுத்தப்படுத்துவதற்கு மட்டுமில்லா மல் தெருவோர டக்கடைகளில் பாத்திரங் கள், கொல்கள் ஆகியவற்றைக் கழுவவும், நடைபாதை வாசிகள் குளித்துத் துணி துவைக்கவும் கூடப் பயன்படுகிறது!

•• கல்கத்தா வாசிகள் எப்போதும் பர பரப்பாய் இருக்கிறார்கள். பஸ் நேரங் களில் நடக்கும் போது பூர். சப்பாத்தி போன்றவற்றை வாங்கி கையில் வைத்துக் கொண்டு, சாப்பிட்டுக் கொண்டே நடப்பது

கடந்த இதழில் கடந்தது:

ஸ்வேதா, அருணாசலம், சாலி என்ற அக்கா மித்ரன், நிவேதா என்ற நண்பர்களுக்கு இடையில் பிறந்த மன், பத்தாவது, சமந்த எண்ணங்களைப் பிறந்த மன்.

தூரமிட சத்தியம் போன தனையுறவிலிருந்து மேல்வேன். மகன் விபரமை எப்படியாவது மெரி மாலில் நுக்க வைத்தால் வழிவகுத்துவிடலாம் என்று முடிவும். தொடர்ந்து போன தந்தை மனைவியை இழந்தவர்.

ஸ்வேதா, தந்தை தூரமிட சத்தியத்துடன் மடகட்ட இன்னுமாளைச் சந்திக்கப் புறப்பட்ட வழி நிறைவு.

மடகட்டு இன்னுமாள் இளைஞனாவன். அறிந்த பட்டிய வரை இன்னும் முடிவாகாமல் இருப்பதால் கொடுத்துக் கொண்டிருப்பவன். கமலத்திலேயே உணர்ச்சி வசப்படுபவன்.

மடகட்டு 4 இன்னுமாளைச் சந்திக்க காத்திருக்கும் போது ஸ்வேதா, பிருத்விராஜைச் சந்திக்கிறாள். இரண்டு நாள் சந்திப்பு. அவ்வளவுதான்.

பிருத்விராஜ் இவளுக்கு. மின்ன உலகில் மடகட்ட நாகரிகமும் வளர்ச்சியும் கலப்பவன். இன்னுமாளிடம் சொல்வதற்காக ஒரு சமாதான தூதுவனாக வந்திருப்பவன்.

இன்னுமாள் அறையிலிருந்து வெளிப்பட்டு, சாலியோடு, 'எதையே இன்னும் முடிவு கலை. அதுக்குள்ள ஸ்ரீலங்காவா... போ போடா' என்று ஸ்வேதாவைத் தூண்டுகிறான்.

பிருத்விராஜைத் தன் முடிவைச் சொல்ல ஏற்றிச் சொன்று, 'சொல்லுங்க உன் கதையை' என்கிறான்.

தனை, தப்பி, படம், மிஸ்டிக் என்னால் அவிழ்த்துப் போன இதழில் சொன்ன மெ பக்கங்களை மேல்ப் காலத்த நடவடிக்கை முன்தைக் காண்பிப்பது போல் மேல் சொன்ன பாரக்கலில் கட்டுரை விட்டது. இரண்டாவதாகச் சொன்ன இதழைத் தேடிப் படித்துவிட்டு, இங்கே வாருங்கள். மீண்டும்.....

மீதமும் பல்லிலிருந்து இறங்கியதும் பரபரப்பாய்க் கன்னமை ஓட்டிச் வெரோம னைத் தொடர்ன். காணவில்லை.

மனிக்கட்டைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்தான். இரண்டு நாற்பது. பிட்டத்தட்ட ஒரு மணி நேரம் லேட். எத்தனை பொறுமை யாய் இருந்தாலும் விரட்டியடிக்கக் கூடிய தாமதம். சீச்சே, நான் ஏன் லேட் செய்தேன்?

பல் விடாண்டில் இன்றும் இருபது முப் பது பேர் இருந்தார்கள். மாலை வியாபாரத் திற்கு வண்டிகள் வந்து அணிவகுத்துக் கொண்டிருந்தன. கடற்கரைக் காற்று அவனைத் தழுவியது — அவன் அறுமதி மில்லாமலே.

'ப்ப்பப்பறும்...' ஏன்ற தீனமான நாய்ன் ஒலி கேட்டு மதுமதி நிமிர்ந்தான். கடல் முகம் மலர்ந்து நிறம்பிப் பார்த்தான்.

மாருதியின் டிரைவிங் லீட்டில் சில நாய்கள். கடல் அலறுவதை கொள்ளை கொள்ளும் சிரிப்பு.

மதுமதி சட்டென்று தலையைத் திருத்து உள்ளே குதிக் கொண்டான். பல் விடாண்டில் உள்ளவர்கள் அத்தனையும் இங்கேயே குறிபார்க்க, "ஸாரி மொ, எ.வி. ஸ்டேஷனில் லேட்டாயிற்று!" என்றான்.

வெரோனின் இடது கை நடுவிரலால் விடிவரிசை ஒரு வளை வளைத்துக் காலைக் கொப்பினான்.

"ப்ரோக்ராம் நல்லா வந்திருக்கா மது?"

"எம்மேல கோவமா மொ? எல்லாம் அந்தச் சித்ராவால வந்த வம்பு. கடைசில ஒரு மிமிக்ரியையும் சேத்துக்கலாம்னு சொல்லிட்டா. எ.வி. காரங்களும் ப்ரோக் ராம்ல இன்னும் மூணு நிமிஷம் அக்காமிட் பண்ணலாம்னு சொல்லிட்டாங்க... அத னாலத்தான் தேமாய்ட்சி..."

"நான் எ.வி. ஸ்டேஷனுக்கே போய் விஷயத்தைத் தெரிஞ்சிக்கிட்டுத்தான் வந் திருக்கேன். அதனால ஃரீல் பண்ணாதே மது... ப்ரோக்ராம் நல்லா வந்திருக்கா?"

வெரோனின் கோபமே இல்லாமல், புன் னகை மாறாமல் காரை ஓட்டிக் கொண்டே கேட்டான்.

"நீங்களாவே பாத்துட்டுச் சொல்லுங்க மொன்."

"நான் பாக்கறது மட்டுமில்ல. என்ன வீட்ல இருக்கற எல்லோருக்குமே அதை வெச்சித்தான் நான் உன்னை இன்ட்ரட்யூஸ் பண்ணப் போறேன். இந்த வெரைட்டி ப்ரோக்ராமை காம்பேர் பண்ற பொண்ணு தான் தானைக்கு நம்ம வீட்டுக்கு வரப் போறவன்னு சொல்லப் போறேன்."

"பெங்களூர்ல இந்த வெரைட்டி ப்ரோக் ராம் தெரியுமா மொ?"

"வீடியோ டேப். வீடியோ டேப்ல ஒண்ணு இருக்கே... அப்புறம் இந்த ப்ரோக் ராம் பெங்களூர்ல தெரிஞ்சா என்ன? தெரியாட்டித்தான் நமக்கென்ன வலைவு?"

"இதுக்கு முன்னால உங்க வீட்ல என் னைப் பத்திச் சொல்லவேயில்லியா மொ?"

"ம்... நெறையச் சொல்லியிருக்கேன்."

"என்னன்னு?" மதுமதி கொஞ்சமாகக் கேட்டான்.

வெரோனின் காரைச் சாலையோரமாக நிறுத்தினான். அவனைப் பார்த்தான்.

"என்னைப் பத்தி என்ன சொல்ல முடியும் மது? நெஜத்தைப் பூராச் சொன்னா

எங்க வீட்ல இந்தக் கல்யாணத்துக்கு ஒரு துக்க மாட்டாங்க.''

''ஏன் வொ?'' மதுமதியின் குரலில் லேசான பதற்றம் இருந்தது.

''இவ்வளவு நல்ல பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு கொடுத்து வொரதுடானு சொல்லிருவாங்க.''

''ச்சே... ஒரு நிமிஷத்தில் நான் பயந்தே போய்ட்டேன்.''

''எங்கம்மா உன்னைப் பாக்கணும்னு துடிச்சிட்டிருக்காங்க மது... அழைச்சிட்டு வா, அழைச்சிட்டுவான்னு நான் பெங்களூர் போறப்ப எங்கிட்ட சொல்லாங்க. நீதான் என்னவோ சொல்ல பிடிக்கலைன்னு சொல்லிட்டே.''

''இல்ல வொ. இது பிடி இல்ல. எனக் கென்னவோ நான் உங்க வீட்டை முதல்ல

பார்க்றதை விட நீங்க எங்க வீட்டை முதல்ல பார்க்றதுதான் நல்லதுன்னு தோணுது...''

''ஏன் மது?''

''வீட்டுக்கு வாங்களேன். அம்மா, அப்பா, மீரா எல்லாரையும் பாருங்க. பேசுங்க. அப்புறம் சொல்லுங்க...''

''ஓகெனே... என்னிக்குச் சவுட்டுப் போறே?''

''இன்னிக்கே.''

''இப்பவே?''

''ம்!''

வெற்றவன் வாயில் இடது கை கட்டை விரலையும் நடு விரலையும் வைத்துப் பலமாக விசில் அடித்தான். மாருதியை அதி உற்சாகமாகக் கொம்பினான்.

''ஸ்டே..... ஸ்டே'' என்றான் மதுமதி.

''ஓ.கே. ஸ்டே'' என்று ஸ்டியரிங்கை வலது பக்கம் திருப்பினான் வெற்றவன். கார் சின்னப் பாலத்தில் ஏறி, மதுமதி ஏற்கனவே பொத்திக் கொண்ட பள்ளிற்றாவைக் கடந்தது. ஒற்றை பனைமரத் திருத்த நடை பாதை. அதன் கடைசி முடுக்கு தீரையைப் போல்டர்கள். இன்றே பார்க்க வேண்டிய படங்கள். எதனையும் பலமாய்த்தும் ஐம் பதே வயசு பல்பொடி. அரோன் கத்தியை டன் கம்பூனியம். கலைக்கச் சிறந்த பிடிகள். இரண்டு நிமிடப் பயணம். இரண்டாவது ஒரு பிட்டு.

''இங்கயே நிறுத்திக்குங்க. எங்க சந்துல குள்ள கார் நுழையாது'' என்றான் மதுமதி. கார் வலது புறம் ஒழுங்காய் நடை பாதையை ஒட்டி நின்றது.

வலதுபுறம் மிகச் சிறிய சந்து.

மதுமதி அந்த சந்தில் புகுவதைச் சற்றுத் தள்ளிப் பிடித்து நடந்தான்.

''நம்ம அரண்மனை வந்தாச்சு'' என்றான்.

வெற்றவன் அந்த வீட்டின் முற்றப்பகு தியைக் கடந்தான். நீளமான நடை. வரிசை யாய் வலப்புறம் மாத வாடகைக்கு விடப் படும் வாட்டின் அறைகள் போல அறைக் கதவுகள். பத்தடி நடந்தும் மதுமதி ஒரு கதவைத் தட்டினான்.

